உ

கணபதிதுணை.

திருப்பூவணம்

கந்தசாமிப்புலவரியற்றிய

# திருப்பூவணநாதருலா.

இது,

வடக்குப்பட்டு

ம-ா-ா-ஸ்ரீ

த. சுப்பிரமணியபிள்ளையவர்கள்

விருப்பத்தின்படி,

சென்னைப் பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

**வே. சாமிநாதையரால்,**

கையெழுத்துப் பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து,

தாம் நூதனமாக இயற்றிய அரும்பதவுரைமுதலியவற்றுடன்

சென்னபட்டணம் :

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

குரோதிஞு கார்த்திகைமீ.

*1904.*

விலை அணா. ௪.

*Copyright Registered.*

# இப்புத்தகத்திலடங்கியவை.


௧. இந்நூல் அரும்பதவுரை முதலியவற்றில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள்முதலியவற்றின் முதற்குறிப்புக்கள் .

௨. முகவுரை.

௩. நூலாசிரியர்வரலாறு.

௪. திருப்பூவணநாதருலா. ௧-௩௧.

௫. திருப்பூவணநாதருலா அரும்பதவுரை. ௩௨ - ௪௦

## இந்நூல் அரும்பதவுரைமுதலியவற்றில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள்முதலியவற்றின் முதற்குறிப்புக்கள்.

இரதவா - இரதவாதஞ்செய்தபடலம்.
உமைவரு - உமைவருசருக்கம்.
கனக - கனகமாலையாரிலம்பகம்.
கா - காரிகை.
சந்திரோ - சந்திரோபாலம்பனப்படலம்.
சிதம்பரச்செய் - சிதம்பரச்செய்யுட்கோவை.
சிதம்பரவுபதே - சிதம்பரவுபதேசச்சருக்கம்.
சிந்தா - சிந்தாமணி.
சுந்தர - சுந்தரமூர்த்திநாயனார்.
சூரியன்பூ - சூரியன்பூசித்தசருக்கம்.
செங்கீ - செங்கீரைப்பருவம்.
செய் - செய்யுள்.
தமிழ்நா - தமிழ்நாவலர்சரிதை.
திருக்குற் - திருக்குற்றாலப்புராணம்.
திருஞா - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்; திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்.
திருநா - திருநாவுக்கரசுநாயனார்.
திருப்பூவணப்பு - திருப்பூவணப்புராணம்.
திருமால்சிவ - திருமால்சிவபிரானைசருக்கம்.
திருவிளை - திருவிளையாடல்.
தே - தேவாரம்.
பதி - பதிகம்.
மணி - மணிமேகலை.
மாறியா - மாறியாடியபடலம்.
முத்துக் - முத்துக்குமாரசாமிபிள்ளைத்தமிழ்.
வருணகுலா - வருணகுலாதித்தன்மடல்.
வருணன்விட்ட-வருணன்விட்டகடலைவற்றச்செய்தபடலம்.
விருத்த - விருத்தகுமாரபாலரானபடலம்.

உ

கணபதிதுணை.

# முகவுரை.

திருவாசகம்.

"பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்"

திருவிளையாடல்.

"பருங்கை மால்வரைப் பூழியன் பைந்தமிழ் நாட்டி
விரங்கு தெண்டிரைக் கரங்களா லீர்ம்புனல் வையை
மருங்கி னந்தன மலர்ந்தபன் மலர்கடேய்ப் பணியப்
புரங்க டந்தவ னிருப்பது பூவண நகரம்."

**திருப்பூவணநாதருலாவென்பது,** திருப்பூவணத்திற் கோயில்கொண்டெழுந்தருளிய சிவபெருமான்மீது கவிஞர்பெருமானாகிய **திருப்பூவணம் கந்தசாமிப்புலவரியற்றியது;** இதிலுள்ளகண்ணிகள் ௪௬௬.

**திருப்பூவணமென்பது,** பாண்டிநாட்டுள்ள தேவாரம்பெற்ற சிவஸ்தலங்கள்பதினான்கனுள் ஒன்று; இதற்குரிய தேவாரப்பதிகம் ௪; (திருஞா. பதி. ௨; திருநா. பதி. ௧. சுந்தர. பதி. ௧.) கருவூர்த்தேவர் திருவிசைப்பா - ௧. வடமொழி தென்மொழி இரண்டிலும் இதற்குப் புராணங்களுள்ளன.

**ஸ்தலவிநாயகர்கள்:** கற்பகவிநாயகர், மணிமந்திரவிநாயகர், ஒட்டுக்கல் வெள்ளைவிநாயகர்.

**ஸ்வாமியின்திருநாமங்கள்,** புஷ்பவனநாதர், பாஸ்கரபுரீசர், பிதிர்மோக்ஷபுரீசர், பிரஹ்மபுரீசர், ரகஸ்யசிதம்பரேசர், திருப்பூவணேசர், அடைவார் வினைதீர்ப்பவரென்பன; ஸந்நிதி கிழக்கு

**அம்பிகையின்திருநாமங்கள்:** சுந்தரநாயகி, தடிதம்பை, ஸெளவர்ணவல்லி, அன்னபூரணி, அழகியநாயகி, அழகியமின், மின்னனையாள், மின்னம்மை, மின்னாளென்பன. அம்பிகையின்திருக்கோயில், ஸ்வாமியின் வலப்பக்கத்துள்ளது.

**நாயகர்திருநாமங்கள்:** ஸெளந்தரநாயகர், அழகியநாயகர், அழகுக்கு ஆருமொவ்வாதவரென்பன; பொன்னனையாளுடைய நகத்தழும்பைப் பெற்றருளியவர் இவரே; அத்தழும்பை இன்றும் காணலாகும்.

**ஸ்தலத்தின்திருநாமங்கள்:** புஷ்பவனம், புஷ்பவனகாசி, புஷ்பபுரம், பாஸ்கரக்ஷேத்திரம், பிதிர்மோக்ஷபுரி, பிரஹ்மபுரி, ரஹஸ்யசிதம்பரம், திருப்பூவணம், திருப்பூவணக்காசியென்பன; பூவையெனவும் திருப்புவனமெனவும் இதன்பெயர் வழங்கும்.

**தீர்த்தங்கள்:** மணிகர்ணிகை அல்லது மணிகுண்டம், தேவிகுண்டம், வையை, பாபநாசம், பிரஹ்மதீர்த்தம், லக்ஷ்மிதீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், நளதீர்த்தம், விஷ்ணுதீர்த்தம், வஸிஷ்டதீர்த்தமுதலியன.

**ஸ்தலவிருக்ஷம்:** பலா.

**வழிபட்டுப்பேறுபெற்றோர்கள்:** விநாயகர், உமாதேவியார், திருமால், திருமகள், பிரஹ்மதேவர், அகஸ்தியர், காளி, சூரியன், திரணசனர், தருமஞ்ஞர், ஸூர்யஜோதிமஹாராஜா, மார்க்கண்டேயர், வஸிஷ்டர், இந்திரன், சந்திரன், நளன், சாகாசனர், பொன்னனையாள் முதலியோர்கள்.

**இந்தஸ்தலத்தில்** என்பு, மலர் அல்லது சிலையாகுமென்பது ஐதிஹ்யம். வையைநதியிலுள்ளமணல்கள் சிவலிங்கங்களாகத் தமக்குத் தோற்றினமையின், அவற்றை மிதித்தற்குஅஞ்சி, தரிசித்தற்கு அக்கரையிலேயேநின்ற திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்முதலியோர்கள்பொருட்டுச் சிவபெருமான் திருநந்திதேவரைச் சிறிதுசாய்ந்திருக்கும்படி கட்டளையிட, அவர் அப்படியே சாய்ந்திருந்தனரென்று பெரியோர்சொல்லுகின்றனர் ; அந்தத்தோற்றத்தை இன்றுங் காணலாகும். இதனை, "செப்பு மூவர்சொற்ற மிழ்த்துதிக்க விருப்பொடு வந்துவையை மணற்சிவ லிங்கமென மனத்தெணி முன்புவட கரைக்கவர் நின்றுதமிழ் பாடுபொழு தேயிடப மாமுதுகு சாயும்வகை யேசெய்து முன் மூவர்தரி சிக்கமகிழ் நேசர்" (புஷ்பவனநாதர்வண்ணம்) என்பதனுலுமுணர்க. பொன்னனையாள்மடமென்றும், பொன்னனையாள்மண்டபமென்றும் இரண்டுகட்டிடங்கள் இத்தலத்திலுள்ளன ; அவற்றுள் முன்னது பொன்னனையாள் சிவனடியார்களை அமுதுசெய்வித்தஇடமென்றும் பின்னது அவள்பொருட்டு மதுரைச் சோமசுந்தரக்கடவுள்வந்து ரஸவாதம்செய்தருளியஇடமென்றும் சொல்லுகின்றனர். கோரக்கஸித்தருடைய ஆலயமொன்று இத்தலத்தில் இருக்கின்றது. இதுநிற்க.

உலாவென்பது தமிழிலுள்ள தொண்ணூற்ருறுவகைப்பிரபந்தங்களுள் ஒரு வகைநூல் ; ஒருதலைவன் பேதைமுதற் பேரிளம்பெண் ஈருகிய எழுபருவமாதர்களும் தன்னைக்கண்டுகாதல்கூர வீதியிற் பவனிபோந்தானென்று கலிவெண்பாவாற்கூறப்படவேண்டுமென்பது அந்நூலுக்குரியவிதி. இங்கே பாட்டுடைத்தலைவர் திருப்பூவணநாதர் ; மாதர்களென்றது, ஈண்டு உருத்திர கணிகையரை; எழுபருவங்களாவன: (ஐந்தாம்ஆண்டுமுதல் ஏழாம்ஆண்டளவும்) பேதை; (அ - கக.) பெதும்பை; (கஉ - கங.) மங்கை ; (கச - கக.) மடந்தை; (உ0 - உ௫.) அரிவை ; (உசு - ௩க.) தெரிவை; (௩உ-௪0.) பேரிளம்பெண். இவற்றுள் ஒவ்வொருபருவத்தையும் வேறுபடுத்தி வருணிப்பதுமுதலியன கஷ்டமாகவிருந்தாலும் பெதும்பைப்பருவத்தை வருணித்தல் மிகவும் கஷ்டமென்பர் ; "பேசு முலாவிற் பெதும்பைபுலி" என்பது ஔவையார் திருவாக்கு.

இந்தவுலா, திருப்பூவையுலாவெனவும்வழங்கும்.

திருப்பூவணத்தலவிசேடங்களும் பிற சிவஸ்தலங்களின்விசேடங்கள்முதலியனவும் பழைய தமிழ்நூல்களின் அருமைப்பிரயோகங்களும் இந்நூலில் ஆங்காங்குக் காணப்படுவதன்றி, அக்காலத்திலிருந்த சிவகங்கைஅரசராகிய, முத்துவடுகநாததுரையவர்களின் சிவநேசமும் தீநக்கண்ணதேவர், பூவணலிங்கம்பிள்ளை, ஈசுவரமூர்த்தியாபிள்ளை என்பவர்கள் இத்தலத்தில் இன்ன

இன்ன திருப்பணிகள் செய்தார்களென்பதும் அறியலாகும்; இந்நூலில் ௪௬, ௯௭, ௧00, ௧0௪ - ம் கண்ணிகளைப்பார்க்க.

௧௮ - வருடங்களுக்குமுன், மேலகரம் ம-ா-ா-ஸ்ரீ **திரிகூடராசப்பக்கவிராயரவர்கள்**, திருநெல்வேலியில் இந்நூல் ஏட்டுப்பிரதியொன்று கொடுத்தார்கள்; அப் பிரதியில் முதற்பகுதியில்லை; பெரும்பைப்பருவமுதலியபாகமேயிருந்தது; நடையின் இனிமையைநோக்கி முற்றும் படித்துப்பார்க்கவிரும்பி, மதுரைமுதலிய இடங்களிற் பலமுறை முயன்றும் பிரதி கிடைக்கவில்லை; இப்போது மதுரையில், ஸேதுபதி ஹைஸ்கூலில் உபாத்தியாயராக இருக்கும் ம-ா-ா-ஸ்ரீ யஸ். **சாமிநாதையரவர்கள்** மிகமுயன்று பிரமனூர் ம-ா-ா-ஸ்ரீ **வில்லியப்பபிள்ளையவர்களிடமிருந்து** முழுவதுமுள்ள ஏட்டுப்பிரதியொன்றுபெற்றுச் சிலவருடங்களுக்குமுன்பு அனுப்பினார்கள். இந்நூற் பரிசோதனைக்குக் கிடைத்தவை இந்த இரண்டுமே.

இந்நூலிலிருந்த சில ஐயங்களை நீக்கியவர்கள், திருப்பூவணம் பிரஹ்மஸ்ரீ **வேங்குசாஸ்திரிகள்** முதலியோர்கள்.

அடிமடக்குக்களிலும் சிலேடைகளிலும் பேதமில்லாமல் நகர ணகரங்களும், எதுகைகளிற் பன்மைவரவேண்டியவிடத்து ஒருமையும் ஒருமைவரவேண்டியவிடத்துப் பன்மையும் இந்நூலுட் சிலவிடத்து வந்திருக்கின்றன; மாற்றக்கூடாமையால் அவைகள் இருந்தவாறேபதிப்பிக்கப்பட்டன.

இந்நூலுள் ஒவ்வொருகண்ணியும் நயமாகஇருப்பினும் பின்னர்ச் சுட்டியவைகள் மிகப்பாராட்டற்பாலன:—

| | | கண்ணியின் எண்கள். |
|---|---|---|
| ௧. | திருத்தேருடன்வருவோர். ... ... | ௮௩ - ௧௨௮. |
| ௨. | குழாத்தினர்கூற்று. ... ... ... | ௧௪௨ - ௧௫௬. |
| ௩. | பேதைவருணனை. ... ... ... | ௧௫௮ - ௧௭௪. |
| ௪. | கைத்தாய் பேதையைக்கற்பித்தல்முதலியன. | ௧௮௧ - ௧௯௧. |
| ௫. | திருப்பூவணநாதனைத் தெய்வப்பலாப்பழமென்று கூறும் சிலேடை. ... ... | ௧௯௫ - ௨0௨. |
| ௬. | மூவர் முதலியோரைக்கூறுதல். ... ... | ௨௨௪ - ௨௩0. |
| ௭. | ஸ்வாமியின் கபோலத்தழும்பைப்பாராட்டல். | ௨௩௬ - ௨௪0. |
| ௮. | மங்கையைப் புட்பவனமென்றல். ... | ௨௫௨ - ௨௫௭. |
| ௯. | சொல்லின்பம். ... ... ... ... | ௨௮௫ - ௨௯௩. |
| ௧0. | பாண்டிநாட்டுள்ள ௧௪ - தலங்கள். ... | ௨௯௮ - ௩௧௧. |
| ௧௧. | அரிவை தன்துயரைப்போக்கிக்கொள்ள முயன்றமை. ... ... ... ... ... | ௩௫௫ - ௩௫௯. |
| ௧௨. | தெரிவை, பொன்னனையாளுடைய நித்தநியமமுதலியவற்றைச் சித்திரத்தில், முறையேபார்த்து உவத்தல். ... ... ... ... | ௩௭௭ - ௩௯௯. |
| ௧௩. | தெரிவை ஸ்வாமியைத்தரிசித்தலும் கூறுதலும். | ௪0௮ - ௪௧௯. |
| ௧௪. | பேரிளம்பெண் துதித்தலும், தன்னைக் கொன்றையாகக்கூறுதலும். ... ... ... | ௪௫௮ - ௪௯௪. |

இங்ஙனம்,

வே. சாமிநாதையன்.

4

# நூலாசிரியர்வரலாறு.

இந்நூலாசிரியராகிய கந்தசாமிப்புலவருடைய ஊர் திருப்பூவணமே; இது, திருவாப்பனூர்ப்புராணம், பாயிரம். ௫: "கனியினைப் பிழிந்துசெந்தேன் கண்டென வாப்ப னூர்நம், பனிமதி மிலைந்த நாதன் பன்னரும் புராணந் தன்னைப், புனிதன்மெய்க் கந்த சாமிக் கவிஞன்பூ வணத்தான் பார்மே, லினி தெனப் புலவர் கூற வின்றமிழ்ப் புணர்த்தி னானே" என்பதனாலும், திருப்பூவணம் கந்தசாமிப்புலவரென்ற வழக்கத்தாலும் விளங்குகின்றது. திருப்பூவணத்திலிருந்த ஓர் உருத்திரகணிகையின்புத்திரராக இவர் கூறப்படுவர்; இது, "திருவாலவாயர்" [௫௧-ம்பக்கம்] என்னும் இந்நூற் சிறப்புப்பாயிரச் செய்யுளில், 'பொன்னனையாள் பெற்றெடுத்த புத்திரனோர் கந்த சாமி' எனக் கூறப்பட்டிருத்தலாலும், பொன்னனையாளை, 'எம், பொன்னனையாள்' (௫௨ - ௫௯-ம் கண்ணி) என இவ்வுலாவில் இவரே பாடியிருத்தலாலும் கர்ணபரம்பரைக்கேள்விகளாலும் விளங்குகின்றது. இவ்வுலாவில், ௪௯: 'மன்போசன் முத்து வடுகநா தேந்த்ரனருள்,பொன்போலு மாடை புனைந்தருளி' என்பதனால், இவர், சிவகங்கைஅரசராகஇருந்த முத்துவடுகநாததுரையவர்களின் காலத்தவராக எண்ணப்படுகின்றார். அக்காலம் சற்றேறக்குறைய *௯௦-வருடங்களுக்கு முற்பட்டிருக்கலாமென்று தெரிகின்றது. திருப்பூவணப்புராணம், பாயிரம், ௫-ம்செய்யுளிற் கூறப்பட்டிருக்குங்காலம் இற்றைக்கு ௨௮௫ - வருடங்களுக்குமுந்தியதாகின்றமையாலும் ஷை புராணஏட்டுப்பிரதிகளில் அந்நூல் இவர்செய்ததாக எழுதப்படாமையாலும் செய்யுட்களின் நடைவேறுபாட்டினாலும் அந்தக்காலத்தை இவருடையகாலமாகச் சொல்லக்கூடவில்லை. இவ்வுலாவும் திருவாப்பனூர்ப்புராணமும் இவரியற்றிய நூல்களென்று சிறப்புப்பாயிரங்களால் நிச்சயமாகத்தெரிகின்றன. புஷ்பவனநாதர்வண்ணமும் திருப்பூவணஸ்தலவகுப்பு, தீர்த்தவகுப்பு, மூர்த்திவகுப்பு என்பவைகளும் திருப்புனவாயிற்புராணமும் இவராற்செய்யப்பட்டனவென்று சொல்லுகின்றனர். இவரியற்றியசெய்யுட்களை ஆழ்ந்துபார்க்கையில் தேவாரமுதலியவற்றிலும் சைவபுராணங்களிலும் சங்கச்செய்யுட்கள் முதலியவற்றிலும் ஒழுங்கான பயிற்சியுள்ளவரென்றும் தமிழ்ப்பாஷையில் மிக்கஅன்புடையவரென்றும் சிவபக்தி அடியார்பக்தி வாய்ந்தவரென்றும் இவர் எண்ணப்படுகின்றார். மேலேகாட்டிய, "கனியினைப் பிழிந்து" என்னுஞ்செய்யுளால், இவருடையவாக்கு, அக்காலத்திலேயே இன்னவண்ணம் மதிக்கப்பெற்றுவந்ததென்பது விளங்குதலின், அதன் அருமையைப்பற்றி ஈண்டு எழுதுவது மிகையென்று இம்மட்டோடே நிறுத்துகின்றனன். இவருடைய நூலாராய்ச்சிமுதலியன பின்பு வெளிப்படுத்தப்படும்.

### வெண்பா.

பூவணத்தெம் புண்ணியன்முன் பொன்னனையா ளுக்காக்கொள்
தூவணத்த பொன்மேனிச் சுந்தரன்மேற் - பாவணத்த
கந்தசா மிப்பேர்க் கவிஞனன்பிற் செய்யிந்நூற்
கெந்தநூ லாகு மிணை.

---

* முத்துவடுகநாததுரையவர்களின் காலத்தை விளங்கத்தெரிந்துகொள்ளுதற்குத் தக்க சாதனம் இப்பொழுது எனக்குக் கிடைக்கவில்லை.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

உ

கணபதிதுணை.

# திருப்பூவணநாதருலா.

### காப்பு.

சேவையுலாக் கொண்ட திருப்பூ வணர்மேல்வெண்
பாவையுலாம் பூவையுலாப் பாடவே - கோவைச்
சிரத்தந்தத் தந்திவண்ணன் செம்மலென வந்து
கரத்தந்தத் தந்திவண்ணன் காப்பு.

### நூல்.

க. பொன்பூத்த வுந்திப் பொலந்தா மரையாற்கு
மன்பூத்த கஞ்ச மறையவற்கு - மின்பூத்த

உ. விந்திரற்குந் தேவர்க்கு மியாவர்க்கு மாதவர்க்குஞ்
சந்திரற்குஞ் சூரியர்க்குந் தம்பிரா - னந்தமிலாப்

௩. பல்கோடி யண்டம் படைப்போன் பரிப்போனப்
பல்கோடி யண்டம் பரந்தழிப்போன் - பல்கோடி

ச. நாரணரு நான்முகரு நாளாற் றழியினுந்தன்
காரண நேத்திரத்தாற் கண்டிருப்போ - னாரணஞ்சொ

ரு லெல்லாப் பொருளு மிதுபொருளென் றோர்பொருண்மே
லில்லாப் பொருளு மியானென்போ - னெல்லாநீ

சா. யென்னனை யாரிடத்தி லென்றுமிரான் மின்னனையா
ளென்னனை யாரிடத்தி லேயிருப்போன் - முன்ன

எ. ரிமகிரிக் கெய்திமணந் தெம்பெரு மாட்டி
யுமைதழுவச் சின்னு ளுறைந்து - சிமையக்

அ. கயிலைமலைக் கெய்தியங்குக் காமுற் றுறைநாட்
குயிலை மலைக்கரசன் கொம்பைப் - பயில்வொரீஇ

கூ. யீசன் வெகுளவுமை யேதென்ன நீதக்க
னாசமகம் பார்க்க நடந்தநாட் - பேசியவெம்

க0. வார்த்தை யவமதித்தாய் மாதே யறிந்துசெயு
மார்த்தகொடும் பாவமீ தாகையாற் - றீர்த்தலரி

கக. தெற்குரியை யல்லைநீ யேகுழியே கென்னவுமை
தற்குரிய நாதனிரு தாடுதிப்ப - நற்கருணை

கஉ. வள்ள றிருவாய் மலர்ந்தருளிப் பாண்டிநாட்
டுள்ளநகர் பூவணமென் றோர்நகருண் - டொள்ளிழையே

கங. யத்தலத்தி லல்லா லறிந்து செயும்பாவ
மெத்தலத்துந் தீராதங் கேகென்னக் - கைத்தலத்தா

கச. லீசனைப் போற்றி யெழுந்தருளித் தென்றிசையில்
வாசமலி புட்ப வனத்தெய்தித் - தேசுவளர்

கரு. செம்பொற் றருவொன்று செங்கையால் வைத்துவளர்த்
தம்பொற் றருவி னடிநீழற் - கொம்பர்

கசா. தெருளார் பெருந்தவமுன் செய்ய வெளிப்பட்
டருளே திருமேனி யானேன் - பிரியா

கஎ. வொருபதம் வேண்டிமணி யோடைகண்ட வெய்யோற்
கிருபதங் காட்டியரு ளீந்தோன் - பெரியசத

கஅ. பத்திர வேதன்முன்கைப் பற்றி வருஞ்சாப
மத்திர மாக வருள்செய்தோன் - மெத்தத்

ககூ. தருக்குதிர ஞசனனார் தம்மருக்க ராக
வரக்க வுருவொழித்த வம்மான் - புரக்கு

உ0. முருமே னிவந்தமா யோனைத் தவஞ்செய்
திருமேனி தீண்டவருள் செய்தோன் - கருமேனி

உக. மாமுகவ ரர்ச்சிக்க வானோர்க்கு மேனோர்க்குந்
தாமுதன்மை யாகுந் தலையளித்தோன் - காமர்

உஉ. செழுந்தமிழ் மாமுனிவன் றெண்கடனீ ரெல்லா
முழுந்தமிழ்நீ ராக்க வுவந்தோன் - றொழுந்தருமன்

உங. காளிசுச் சோதிகன்மார்க் கண்டன் வசிட்டனிந்த்ரன்
வாளிமக ரன்பூசை வாஞ்சித்தோன் - றோளிற்

உச. றழைக்கும் படிகொணள சக்ரவர்த்தி முன்பட்
டிழைக்குங் கலிதீர்த் துவந்தோன் - மழைக்கு

உரு. ளொருநாட் பகுந்துண்ட வுப்பிலாக் கீரைக்
கருமாப் பதவி யளித்தோன் - விரிநீர்ச்செம்

உசு. போதத் திருவுருவாம் பொன்னனை யாட்கிரத
வாதத் திருவுருவாய் வந்துதித்தோன் - கோதிலறப்
உஎ. பைங்கூழ் வளர்த்த பசும்பாதி செங்கையான்
மங்கா தமைக்க வளர்ந்ததருத் - துங்கமா
உஅ. ரோருகத்தி லேதருவா யோருகத்தில் வில்லுவமா
யோருகத்தில் வன்னியா யோருகத்திற் - சீருற்ற
உகூ. பாரிற் கடவுட் பலாவாய்த் தழைக்கவதன்
வேரிற் கிளைத்தமுதல் விண்ணவர்கோ - னேரா
௩0. மதித்த கயிலை வரையா னடக்க
மதித்த கயிலை வரையான் - றுதித்தார்க்கு
௩க. வாய்த்திடத்தா னீப வனத்தினு ளன்மறைசொல்
வாய்த்திடத்தா னீப வனத்தினுன் - சாத்தியகை
௩உ. நந்த னிறைவிருத்த னுகத்தான் வீற்றிருந்தா
னந்த னிறைவிருத்த னுகத்தான் - முந்தரங்க
௩௩. வூரவரம் பெற்றமா யூரத்தான் கண்டோன்மீ
தூரவரம் பெற்றமா யூரத்தான் - றேரிற்
௩ச. படங்கொண்ட வல்குற் பராபரைமின் னம்மை
யிடங்கொண் டுறைபூவ ணேச - னடங்கொண்டு
௩ரு. சேவிக்குந் தெய்வத் திருப்பங் குனித்திருநாண்
மேவப் பெருமகிழ்ச்சி மீதூரக் - காவற்
௩சு. குருமணிவெள் ளேற்றுக் கொடியேற்றி வீதித்
திருவுலாப் போதுந் தினத்து - மொருநாட்
௩எ. சகங்காட்டுங் கங்கு றணிய வருணன்
முகங்காட்டச் சங்க முழங்கச் - சுகங்காட்டும்
௩அ. பொன்மலை வல்லியுடன் பூண்ட திருத்துயினீத்
தென்மலை வில்லி யெழுந்தருளி - நன்மைப்
௩கூ. பருவயிர மாணிக்கப் பல்லக்கின் மீது
திருவனந்தற் றெய்வவுலாச் சென்று - பெரிதிருந்து
ச0. தேறத் தரும்பெரிய திவ்யா கமப்படியே
கூறத் தரும்பூசை கொண்டதற்பின் - மாறற்ற
சக. நீணித் திலத்தரள நீல ப்ரவாளவச்ர
மாணிக்கச் சித்ரரத்ன மண்டபத்திற் - பேணிக்கொ

௪௨. டங்காத னாயகியுந் தாமு மெழுந்தருளிச்
சிங்கா தனத்தவிசிற் சென்றிருந்து - நங்கூட

௪௩. ஊரிற்குண் டோதரற்கா னூட்டத் தனிபிரிந்து
பாரிற்செல் வையைப் பகீரதிப்பெண் - பேர்வுற்ற

௪௪. நீட்சிப் பிரிவொழிய நேடி மணப்பதெனக்
காட்சித் திருவபிடே கங்கொண்டு - மாட்சி

௪௫. யலங்கார மாக்கொளத ளாடை யிரண்டும்
விலங்காடை யென்ன விலக்கி - நலங்காணு

௪௬. மன்போசன் முத்து வடுகநா தேந்த்ரனருள்
பொன்போலு மாடை புனைந்தருளித் - தன்போற்

௪௭. றிகழ்ந்திடுங்க ணன்றித் திருமுடியுந் திங்கள்
புகுஞ்செல்வங் கண்டு பொறான்போன் - மிகுங்கதிர்சூழ்

௪௮. செம்பரிதி தானுமொக்கச் சேர்ந்து சுடர்வதென
வம்பொன் மணிமகுட மாங்கமைத்து - விம்ப

௪௯. நணிமகர மண்டலமா நன்முகத்திற் கேற்ப
மணிமகர குண்டலங்கள் வைத்துத் - திணிகொண்

௫0. மணிகண்ட னென்னும்பேர் மற்றிதனா லென்ன
வணிமணிக் கண்டிகண்டத் தார்த்துத் - துணிவொன்றி

௫௧. யாகம் பவளா சலமென் றவிர்சடைவாழ்
மேகம் படிந்த விதமென்ன - மோக

௫௨. முதிர முதிர முழுதுடம்புந் தேவிக்
கெதிரி லவனீந்த தென்ன - மதிநுதலெம்

௫௩. பொன்னனை யாட்களித்த போதிரத வாதந்து
மன்னுபுகை மேற்பரந்த வண்ணமென - மின்னுறவே

௫௪. வெம்மைக் கலிதீர்த்த மேனா ளன்றந்த
செம்மைப் பதக்கமுரஞ் சேர்வித்துத் - தம்மைத்

௫௫. திருவனைக்கோ மாட்டி தினந்தழுவுங் கைபோன்
மரகதக்கே யூரம் வளைத்துப் - பருநன்

௫௬. மணிக்கைவளை யென்ன வரும்போர்க் கிசைய
மணிக்கை வளைகரத்தில் வைத்துத் - துணைக்கமலப்

௫௭. பூவிற் கருகுதிக்கும் பூங்கதிர்போ னாமெல்லாஞ்
சேவிக்க ரத்னச் சிலம்பணிந்து - மேவுற்ற

ருஅ. தம்பொற் சடைக்கிடக்குந் தண்கார்மின் னிட்டனைய
செம்பொற் றிருவா சிகைசேர்த்தி - யெம்பிரான்

ருகூ. மேன்மை வடிவமுடி மேற்பெண் டியானிக்கும்
பான்மையெனக் கண்ணாடி பார்த்தருளி - நான்மறைநூ

சூ0. லோர்ந்தமறை யோர்செ யுபசார மீரெட்டிற்
சார்ந்ததிரு வாரா தனைகொண்டு - தேர்ந்தங்

சூக. கெழுதாச் சுருதி யெழுதுஞ் சுருதி
செழுமாத் திருச்செவியுட் சேர்த்திக் - குழுமித்

சூஉ தருமோசை தேவர் சயசய வென்ன
வருமோசை மாமுனிவ ரோசை - யிருவர்

சூந. நரம்போசை தெய்வநந்தி நம்பிரான் செங்கைப்
பிரம்போசை யோடும் பிறங்க - விரும்போசைச்

சூச. சீர்மணிப்பொற் கோயிற் றிருப்பேர் சுமந்தருள
வார்மணிப்பொற் றண்டின் மகிழ்ந்தேறி - நீர்மை

சூரு. யுணர்வரும்பஃ றேவ ரொதுங்க வடியார்
கணநெருங்கும் வாயில் கடந்து - மணநெருங்குந்

சூசூ. தென்ற னடந்தினிது சேவிப்பத் தென்பாண்டி
யின்றமிழ்நா டெய்ய வெழுந்தருளிக் - கொன்றையணி

சூஎ. பாடுஞ் சடைக்கணிந்த பாகீ ரதிக்கேறி
யாடும் படிபறக்கு மன்னமென - மாடிரட்டு

சூஅ. நீடு கவரி நிரைதுள்ள மாமணித்தே
ரூடு கவரி யுடனேறிச் - சூடிமதன்

சூகூ. பிள்ளைமதி பார்க்கப் பெருமதிவந் தென்னநிலாக்
கொள்ள வுயர்வெண் குடையோங்க - விள்ளுங்

எ0. கொடைக்கடவு ளல்லான் குழாம்புக்கு விண்ணின்
விடைக்கொடியின் றோங்கு விளங்கச் - சுடர்க்கடவுள்

எக. பன்னிருவ ரல்லர்மதி பார்த்திடினே யொன்றன்று
லுன்னி லநேக ருளரென்ன - மின்னுகதிர்க்

எஉ. கோலநிறை ரத்னக் குடையும் பருமுத்தின்
சீல மணிக்குடையுஞ் சேணிழற்ற - மேலே

எந. வினைப்பகையார் வம்மின் வினைக்குரியார் போமி
னெனப்பீலி யாடி யிலங்கப் - பனைக்கைமுகன்

எச. மூடிகத் தேரேறி முன்னடப்பச் சேய்கலவ
நாடகத்தே ரேறி நடந்தருள - ஆடணையு
எரு. மன்னத்தே ரேறி யயன்மா திருக்கருட
வன்னத்தே ரேறி மருங்குவரப் - பொன்னொத்த
எசா. வாதித்த ராறிருவ ராறிரண் டேழ்புரவிச்
சோதிப்பொற் றேரேறிச் சூழ்போதக் - கோதற்ற
எஎ. சீதக் கதிர்முத்தின் றேர்மீதிற் புட்பகத்தேர்
மீதிற் பெருந்தோழன் மேவிவரத் - தீதற்று
எஅ. வந்தணையும் வெள்ளை மதவயி ராவதத்தே
ரிந்திர னேறி யினிதெய்தச் - செந்தழலோ
எகூ. னீதி மறலி நிருதிவரு ணன்பவன
ஞதியீ சான னடலூர்தி - மீதுவரக்
அ0. கூறும் பதினொருவர் கூறருஞ்சாத் தன்வடுக
னேறும்பன் ஞாளி யினிற்போத - மாறின்றி
அக. யேழ்முனிவ ரெண்ம ரிருவ ரொருதனித்தந்
தாழ்வில் விமானந் தமிற்செல்லச் - சூழியக்கர்
அஉ. கந்தருவர் சித்தர் கருடர் சுரருரகர்
வெந்திறற் கின்னரர்சே வித்துவரத் - தந்தைதாய்
அங. வேணு புரக்கோலம் வீழி மிழலையிடைப்
பேணு படிபார்த்த பிள்ளையும் - பூணுமருண்
அச. மெய்யாக் கயிலைமலை வீற்றிருந்த தன்கோல
மையாற்றிற் கண்டருளென் னப்பனு - மெய்யாம
அரு. லாடிச் சிவக்கு மடியைத்தென் னூரிற்
பாடிச் சிவப்பேற்றும் பாவலனுங் - கூடற்கு
அசா. ளாசில் வழுதி யரசற்குச் சம்புவால்
வாசி வரவழைத்த மந்திரியும் - வீசுதிரை
அஎ. சேர்க்குங் கடற்புவிக்குட் டெய்வச் சிவலோகம்
பார்க்க வரவழைத்த பார்த்திபனு - நீர்க்குடிலப்
அஅ. பொன்முடிக்கு ளன்றிப் புனையாத் திருக்கொன்றை
தன்முடிக்குள் வாங்கித் தரிப்போனு - நன்மை
அகூ. யொருவாத தத்தமணி யூர்தியினுஞ் சேமத்
திருவாடு தண்டினுமேற் செல்லப் - பிரியாத

௯0. வெப்பற்றுந் தீர்நாற்பத் தெண்ணு யிரவரெனு
மொப்பற்ற வேடத் துயர்ந்தோரு - மெய்ப்புற்ற

௯௧. சுந்தரன் பாடுதிருத் தொண்டத் தொகைக்குளொன்பான்
வந்த திருக்கூட்ட மாதவருஞ் - சந்ததமு

௯௨. நாவகத்து மார்பகத்து நற்றிருமுன் னூல்கிடக்கும்
பாவகத்த ராம்வேத பாரகரும் - பூவணவன்

௯௩. றெய்வத் திருமேனி தீண்டத் தவம்பெற்ற
சைவப் பெருமறையோர் தங்கிளையு - முய்விப்போன்

௯௪. கண்ணகன் கோயிற் கயிங்கரியஞ் செய்வோரும்
பண்ணமர்பாட் டோதும் பரிசனமு - மெண்ணிறந்த

௯௫. தீர்க்கத் தபோதனருஞ் சேவிப்போ ருஞ்சைவ
மார்க்கப் பதினெண் மடத்தாரு - மேற்கதிறை

௯௬. யண்டர் பணியு மழகிய நாயகர்முன்
மண்டபஞ்ச பாபதி மண்டபமுங் - கண்டருளிச்

௯௭. சித்தங் களிகூர் திருக்கண்ண ராசேந்த்ர
வுத்துங்க னுங்குலத்தி னுள்ளோரு - மத்தற்

௯௮. கமைக்குங் கொடிக்கம்ப மண்டபமு மம்பொ
னிமைக்கத் திருமுன் னியற்றி - யுமைக்கு

௯௯. முரசதிர் கோயின் முதற்பிர காரத்
திருமதிலு மண்டபமுஞ் செய்வித் - தொருதன்

௧00. வரிசைப்பேர் கொள்பூ வணலிங்க மென்னு
முரிமைப்பே ரான்சுற்றத் தோரும் - பெரியமணி

௧0௧. கன்னிகைத் தீர்த்தக் கரைமதிலு மண்டபமு
மன்னுபுடை சுற்றுமாள் வாரியுடன் - முன்னிமுடித்

௧0௨. தூறுசீர்ப் புண்ணியநீர்க் குள்ளிறங்கி நானஞ்செய்
தேறுவார் சொர்க்கத் திருகால்வைத் - தேறப்

௧0௩. படிகட்டி யன்ன படிகட்டி நாளும்
வடிகட் டியதருமம் வாய்த்தோன் - முடிகட்டுந்

௧0௪. துன்னு நதிமரபிற் றோன்றீ சுரமூர்த்தி
யென்னு மவனு மியல்கிளையு - மின்னுங்

௧0௫. கருத்தொன்றி வந்துசிவ காரியங்கள் செய்யுந்
திருத்தொண்டர் தங்க டிரளு - திருத்தஞ்செய்

க0சு. செம்பொனிதழ்க் கும்பமுலேச் சேனயனப் பால்வயனத்
தம்பொனிறத் தேவ ரடியாரும் - பம்புதிரை

க0எ. வெள்ள மெனத்திரண்டு வீதிக் கரைபுரள
வெள்ளி விருவ ரியாழ்முரலத் - தள்ளுகணப்

க0அ. பானுகம்பன் சங்கம் பரிந்தூத வாணன்கார்
மானுங் குடமுழவம் வாசிப்ப - வானுயர்

க0கூ. மெய்யஞ் செழுத்தால் விரவுங் குழலோசை
யையன் செவிக்கின் னமுதூற்றப் - பொய்யன்பில்

கக0. சம்பந்தர் கைத்தாளந் தாக்கிட நீலகண்ட
வெம்பெரும் பாண ரிசைகூட்டப் - பைம்பொன்

ககக. முருடு தடாரிதக்கை மொந்தை பதலே
யிரலே திமிலேமுர சேங்கத் - திரையெறியும்

ககஉ. வையை நதித்தீரன் வந்தான் மணிகுண்டச்
செய்யநெடுந் தீர்த்தச் சிவன்வந்தான் - றுய்ய

ககஙு. நலஞ்செய் நவக்கிரக நாட்களிவை நாளும்
வலஞ்செய்யு மூருடையான் வந்தான் - பொலஞ்செய்ய

ககச. பொன்பதும மானனேய பொன்னனே யாண்மனேக்கு
ளன்பமுது கொண்ட வரன்வந்தான் - முன்பிரத

ககரு. வாதஞ் செயுஞ்சித்தன் வந்தான் மதிக்குடைவேள்
போதஞ் செயும்போர் பொருன்வந்தான் - மோதுவிடங்

ககசு. தண்கழுத்தில் வைத்துநெடுந் தாலிசெழுந் தாமரையின்
பெண்கழுத்தில் வைத்த பிரான்வந்தா - னெண்கழிக்குந்

ககஎ. தூங்க வமரர் தொழும்பா வணங்கொடுக்குஞ்
செங்கம லச்சரணத் தேவந்தா - னெங்கள்

ககஅ. பழவினே வேரறுப்பான் வந்தான் பருவெண்
மழவிடை யேறுயர்த்தான் வந்தா - னழகியமின்

ககக. மங்கைக்கு வாய்த்த மணவாளன் வந்தானென்
றங்கத் திருச்சின்ன மார்ப்பெடுப்பப் - பொங்கு

கஉ0. நதிமாதர் கோக நகமாதர் தெய்வ
மதிமாதர் நீடுவசு மாதர் - கதிர்மாத

கஉக. ரேழ்மாதர் வேலோ னிருமாத ரெண்டிசைக்கே
வாழ்மாத ரேழ்முனிவர் மாதர்கள் - சூழ்வானச்

௧௨௨. சுந்தர மாதரெனத் தோன்றிரதி மாதருட
னந்தர மாத ரனைவர்களுஞ் - சிந்தைமகிழ்

௧௨௩. கோலங்காட் டித்தான் குனிக்குந் திருக்கூத்தை
யாலங்காட் டிற்பார்க்கு மம்மையரு - மூலங்காண்

௧௨௪. சீரிசை யாடிநிழற் செம்ம றனைப்பயந்த
பேரிசை ஞானிப் பிராட்டியரு - மேரிசைதென்

௧௨௫. சையத் தமிழ்நாட்டிற் சைவந் தலையெடுப்பச்
செய்விக்கும் பாண்டிமா தேவியரு - முய்விக்கு

௧௨௬. மந்தண் வயற்பொலிதென் னூரூரி னம்பிக்கா
வந்துலகி லுற்பவித்த மங்கையருஞ் - செந்துவரின்

௧௨௭. மின்றழைத்த வேணி விமலனைத் தன்வீட்டி
லன்றழைத்த மெய்ப்பொ னனையாரு - நின்றுருகி

௧௨௮. யாரணச் செம்பொ னடிபோற்ற வெம்பெருமான்
றோரண வீதிதனிற் றோன்றினனாற் - சேரமரர்

௧௨௯. தட்ப வனப்பாரி சாத வனமழையாற்
புட்பவன மாம்பேர் புதுக்கினார் - பெட்புமின்னாள்

குழாங்கள்.

௧௩௦. போர்க்கைத் திருமழுவார் புட்ப வனப்புதுமை
பார்க்கத் திரண்டகிளிப் பண்பெண்ணப் - போர்க்கரிய

௧௩௧. நீலகண்டந் தம்போ னிமலன் படைத்திருந்த
கோலநின்று பார்க்குமயிற் கூட்டமெனப் - பாலுகந்த

௧௩௨. வாகத் தழகியமின் னம்மை யெழில்பார்க்க
மேகத்தை விட்டுவந்த மின்களென - வேகவொற்றை

௧௩௩. மான்விட் டதனால் வசஞ்செய்தா னென்றறவோர்
தான்விட்ட மான்கூட்டத் தன்மையென - வான்முட்ட

௧௩௪. வேங்கக் குயிலைமகத் தீடழித்தா னென்றுபழி
வாங்கக் குயிறிரண்டு வந்தவென - வாங்கொரனங்

௧௩௫. காணப் பழிப்பகலக் கண்டறிவோ மென்றரன்முன்
சேணாட்டி லன்னமெலாஞ் சென்றவெனத் - தாணாட்டு

௧௩௬. முன்றிலின் மாட முகப்பினின் மேடையிற்செய்
குன்றினிற் சாளரத்திற் கோபுரத்தின் - மன்றிற்

கஙஎ. றடத்தினின் மண்டபத்திற் சாரரங்கிற் றெற்றி
யிடத்தினில் வீதியினி லெய்தி - மடற்குவளைச்

கஙஅ. சேயரிக்கண் மின்னார்நந் தெய்வப் பலாப்பழத்திற்
கீயினத்தின் மொய்ப்பா ரிருமருங்கு - நேயமிகப்

கஙகூ. பூத்து மலர்கருணைப் புட்பவனப் பூந்தேனைப்
பார்த்திருகண் வண்டாற் பருகுவார் - தீர்த்தனணி

கசO. கங்கை தவத்தை வியப்பார் கதிரிமவான்
மங்கை தவத்தை வழுத்துவார் - தங்க

கசக. டவக்குறையை நோவார் தடந்தோளை நோக்கி
நிவக்கு முலைநோக்கி நிற்பா - ருவக்கு

கசஉ. மிகச்சின்ன நுண்ணிடையார் மெல்லியலாள் வைத்த
நகச்சின்ன நோக்கியுள்ள நைவார் - பகைச்சின்ன

கசங. மாவதென் னென்றிவர்மே லவ்வேளெய் யானென்பார்
பாவங் கொடிதெம் பழியென்பார் - தேவரிவர்

கசச. வெள்ளிக் கிரிமுலையாய் மேவற் குபாயமிதென்
றள்ளித் திருநீ றலங்கரிப்பா - ருள்ளுறுபொன்

கசரு. வாகார் பசலையிற்கை வன்சிலையாய்க் கொள்ளுமென
வேகாசம் வீழ வெதிர்நிற்பார் - மாகாதல்

கசசு. வெள்ளத்தை நீந்த விடையோனை நாவாய்கேட்
டுள்ளத்தி னுள்ளே யுருகுவார் - வள்ள

கசஎ. றிருமேனி பாதியே தெள்ளமுத மற்றை
யொருபாதி யும்விடமென் றோர்வா - ரரன்மேல்

கசஅ. விரிபூ மழைபோல் விரியாது தம்மேற்
சொரிபூ மழைநோக்கிச் சோர்வா - ரரிதாய

கசகூ. வெம்மருந்தி னுற்சடைமே லிந்து குளிர்ந்திருப்ப
தம்மருந்தைச் சொல்லீ ரடிகளென்பார் - விம்மியமீன்

கருO. மேல்வலைவீ சிப்பிடித்தீர் மேனுளிர் நாள்விழிமீன்
மால்வலைவீ சிப்பிடித்தீர் வந்தென்பார் - சால்கூடற்

கருக. செய்க்கரும்பைக் கல்லானை தின்னக் கொடுத்தீர்வேள்
கைக்கரும்பைத் தின்னுதோ காணென்பார்-மெய்க்கரும்பாம்

கருஉ. பட்பவள வாயர்முனி பன்னியர்வாழ் தாருவனம்
புட்பவன மாக்கினீர் போந்தென்பார் - புட்பவனங்

கருங. காணி யுமக்கோவிற் காமனுக்கோ சொல்லீர்கைப்
பாணிமழு வேந்துநீர் பார்த்தென்பார் - தூணிமத

கருச. ஞானைத் தடுத்தே யடைவார் வினைதீர்த்த
பேரைப் புதுக்கீர் பிரானெனன்பார் - பாரித்த

கருரு. தேரோட வோடப்பின் சென்றோடி யோடிக்க
ணீரோட வோடநின்று நெட்டுயிர்ப்பார் - சீரோடு

கருசு. மவ்விரத வாதந்தா னன்றுசெய்தா ரின்றுசெய்தா
ரிவ்விரத வாத மெமக்கென்பார் - கவ்வைக்

கருஎ. கிடைவார் கலையு மிழப்பா ருருகி
யுடைவா ரிவரு ளொருத்தி - தடமலரோ

பேதை.

கருஅ. னட்டதிக்கார் பெண்மை யழகு குடிபுகுத
விட்டதொரு மூர்த்தமெனு மென்பேதை - கிட்டுநனை

கருகூ. கூறும் பொதிமலர்பூங் கொட்டை மதுமணமோ
ராறுந்தன் னுள்ளடக்கு மம்புயஞ் - சீறும்

கசுO. விழிதாங்கு நாதனைவில் வேளிரதி பண்டைப்
பழிவாங்கப் பெற்றனைய பாவை - யெழிறுங்கு

கசுக. சங்கை மருவாத் தரள மிரதிபதி
செங்கை மருவாச் சிறுகரும்பு - பொங்கநலம்

கசுஉ. பூத்தறியாப் பூங்கொம்பு போகமறி யாப்பைங்கூழ்
கோத்தறி யாத குலரத்ன - மேத்த

கசுங. விரித்தறியாத் தோகைமயில் வெண்பாலு நீரும்
பிரித்தறி யாதவன்னப் பிள்ளை - மரித்தறியா

கசுச. மைதிகழு நீலகண்டர் வாழ்கின்ற புட்பவன
மெய்திவிளை யாடா விளஞ்சுரும்பு - வைதிகநூ

கசுரு. னேசன் றிருக்கரத்தி னின்றுந்தென் புட்பவன
வாசஞ் செயக்குதித்த மான்கன்று - வீசியவாட்

கசுசு. போரறி யாத பொலங்குழையாண் மன்மதனூற்
பேரறி யாத பிராயத்தாள் - வார்வீழ்த்த

கசுஎ. கொங்கையைச்செப் பென்றுவைத்துக் கொண்டுவிளை யாட
மங்கையரைக் கேட்டு வருந்துவா - டங்குமனைச்

[மட

௧௬௮. செய்யசுவர்ச் சித்திரத்திற் றீட்டுகத லிக்கனியைக்
கையிற் கிளியருந்தக் காட்டுவா - ளையமறப்

௧௬௯. பூசைவரக் கண்டோடிப் போயோ வியப்புறவை
யாசையுடன் கூட்டி லழைத்தயர்வாள் - வீசுமுன்றில்

௧௭0. வெள்ளைக் கதிர்நிலவை வெண்பா லெனப்பளிக்கு
வள்ளத் தினின்முகந்து வாய்வைப்பாள் - விள்ளும்

௧௭௧. படிசே ரிருளிற் படுகோது நீக்கி
வடியாத தேன்மழலை வாயாள் - கடியாமுன்

௧௭௨. பல்லைவிடப் போகாப் பணிநஞ்சு போலத்த
னெல்லைவிடப் போகா விருவிழியா - டொல்லபர

௧௭௩. பக்கக் கலைகள் பயப்பயப் போய்த்திரும்ப
வொக்க நிறைந்தனைய வொண்ணகையாண் - மிக்கமுத்தி

௧௭௪. நாட்டினுமா ரூர்விரும்பு நாவலூ ரன்மணம்போற்
கூட்டினுங் கூடாத கூந்தலாள் - வீட்டி

௧௭௫. னிறைந்த திருநெடுமா னீள்செவியி னுள்ளே
மறைந்த மதுகையிட வன்போற் - பெறும்பிரண

௧௭௬. வத்தி லடங்கு மறைபோற் றதீசிசரீ
ரத்தி லடங்குவச்சி ராயுதம்போற் - குத்திரத்தின்

௧௭௭. மேலொரு நாளொருத்தி மெய்யிற் கனல்வேந்தன்
சால வொளித்த தகைமைபோல் - வாலிதனை

௧௭௮. யெய்ய மறைந்த விராமன்போற் றோன்றிவர
மெய்யின் மறைந்த வியன்முலையா - டுய்யநிறந்

௧௭௯. துன்னு பளிக்குமுன்றிற் றோன்றுநிழற் பாவைதனை
யின்னுயிர்ப் பாங்கி யெனக்கொண்டு - தன்னகத்திற்

௧௮0 சிற்றி லிழைத்தயருஞ் சேயிழையா ளங்கவளை
மற்றொரு கைத்தாய் மடியிருத்தி - முற்று

௧௮௧. வழகு தரக்கனிந்த வாரமுதச் செவ்வாய்
மழலை மொழிதிருந்தும் வண்ணம் - பழையமறைப்

௧௮௨. பூவண மென்றுநிறை பூவணங் கோயில்கொண்ட
தீவண மேனிச் சிவனென்றுங் - காவணவுந்

௧௮௩. தெய்வப் பலாவென்றுந் தெய்வப் பலாவடியிற்
சைவப் பொருளாந் தவமென்றுந் - துய்யதிரை

கஅச. வையைநதி யென்று மணிகர் ணிகையென்று
மைய னிடம்பிரியா வம்மையென்று - மொய்கயிலைக்

கஅரு. குன்றி லிருந்தருளுங் கோனென்றுந் தில்லைமணி
மன்றி னடம்புரிபெம் மானென்று - மென்றுவர்வாய்ப்

கஅசா. பைங்கிளிக்கு மென்சொற் பயிற்றுதல் போற்பயிற்றி
யங்கவள்கேட் டின்மகிழு மவ்வெல்லை - யெங்குமொரு

கஅஎ. தாய்வயிறு காணுத் தருமத் திருவுடம்பை
வேய்வயிறு கண்ட வியன்பதியுங் - காவிரிவாய்ச்

கஅஅ. சீருருவப் பேருருவச் செந்நீத் திருவுருவ
நீருருவ மாக நிகழ்பதியு - மோருமையா

கஅகூ. லார்க்குந் தெரியா வருமைத் திருமேனி
சேர்க்குந் தழும்பிருந்த சீருரு - மோர்க்குமறை

ககூ0. தேற்றுமயன் காணுத் திருமுடியை வையைப்பே
ராற்றின் மணல்கண் டறிபதியும் - போற்றுநெடு

ககூக. மாய னறியா மலர்ப்பாதம் பொன்னனையா
யே மனையறியுந் தொன்னகரு - மேயபிரான்

ககூஉ. றேவர் நெருங்கத் திருத்தேர்ப் பவனிவர
ருவி றிருச்சின்னந் தானிசைப்பப் - பாவையன்னே

ககூரு. முன்செலப்பின் சென்றுகர முன்குவிக்கப் பின்குவித்து
நன்குதுதிக் கத்துதித்து நாடிய - பின்பேதை

ககூச. கைத்தா யரைப்பார்த்துக் காண்டகு சோதிதரு
மித்தேரி லார்சொல் லெனக்கேட்டா - ளத்தேரிற்

ககூரு. றேவி வளர்த்ததிருத் தெய்வப் பலாவடியின்
மேவிப் பழுத்த வியன்கனியென் - றுவலுற

ககூசா. மாது தனக்குரைப்ப மற்றதனைத் தாருமெனக்
காதலுடன் கேட்டழுது கண்பிசையப் - பேதைகே

ககூஎ. ளிந்தக் கனியெவர்க்கு மெட்டா நறுங்கனிகாண்
முந்தப் பழமறையி மொய்ப்பதுகாண் - சந்ததமு

ககூஅ. மொன்ருய்ப் பலவா முருவிற் பொருந்தியெங்கு
நன்ருய்ப் புறம்புமுள்ளு நண்ணுங்காண் - குன்ருத

ககூகூ. பாவு மலையிற் பசுந்தே னுடன்கலந்தங்
கோவில் கருணைரச மூறுங்காண் - மேவுமன்ப

உ00. ருள்ளத் தினிக்குங்கா ணோர்பொன் னனையாட்குக்
கிள்ளைப் பழுத்துக் கிடக்குங்காண் - விள்ளும்

உ0க. பெரிய முகுந்தப் பிரமா தியர்க்கு
மரிய பழங்கா ணங்கே - பரிவகனி

உ0உ. யென்னும் பொழுதி விரதமேற் கொண்டிருக்கும்
பன்னுங் கருணைப் பழமகல - வன்னையரு

உ0ங. மந்தக் கனிந மகத்தி லிருப்பதென
விந்தக் கனியையிற்கொண் டேகினர் - வந்தமத

உ0ச. னென்றுஞ் சிறியார்க் கினியதுகாட் டாரெனத்தன்
வன்றிண் சிலையை மறைத்தகன்றான் - றன்றுங்

பெதும்பை.

உ0ரு. கரையற்ற பெண்மைக் கவின்சிறிது காட்டு
முருவப் பெதும்பை யொருத்தி - யிருள்போய்ப்

உ0சு. புலர்ந்தும் புலராப் பொழுதிற் சிறிதே
யலர்ந்து மலரா வரும்பு - கலந்தன்பு

உ0எ. கூரவருந் தாய்சமைத்த கூட்டிற் கிடவாத
தேரு மிழாத சிறுகிள்ளை - சீரியதன்

உ0அ. கார்க்குஞ் செனவளர்த்த காகவன் புண்மருண்டு
பார்க்கநிறங் காட்டும் பசியகுயி - லேர்க்க

உ0கூ. நிறைந்து விடும்பாலு நீரும் பிரிக்க
வறிந்துமறி யாப்பருவ வன்ன - முறைந்துதனி

உக0. மேவி யிருந்தினிமேல் வேண்டு முறைபார்க்கப்
பூவின்மத னூற்பாடம் போற்றுவாள் - பாவையுமை

உகக. யார்த்த சரவணத்தி லண்ண லுருக் கூட்டுதல்போற்
சேர்த்திருளை கூட்டுந் திருக்குழலாள் - கூர்த்து

உகஉ. வியனீரிற் றுயுடன்போய் மென்மெல நீந்துங்
கயல்போற் புடைபெயர்ச்சி காட்டி - யயலவரைத்

உகங. தெட்டும் புரட்டுந் திருட்டும் புகுந்துகொலை
மட்டும் புகுதா வரிவிழியா - ளொட்டரிய

உகச. வண்டபகி ரண்ட மளக்கத் திருநெடுமால் [ல்வேள்
கொண்டகுறள் போன்முகங்கொள் கொங்கையா-டிண்டிற

உகரு. கூடு மிளம்பருவக் கோலத்தி லேறிவிளை
யாடுசிறு தேரனைய வல்குலா - டோடுருவு

உகசு. மத்திரக்கண் மங்கையரு மாடவருஞ் செய்கலவி
சித்திரத்தி னல்லாற் றெரிந்திடாண் - மெத்தவுரு

உகஎ. வன்னச் சிறுநடையா லாலிங் கனவனப்பாற்
கன்னிக் கொலைசிறிது கைவந்தாண் - மின்னுஞ்

உகஅ. சுதைநிலா முற்றத்துத் தோழியருந் தானும்
புதியகுட நீர்வார்த்துப் போற்றிப் - பதமறிந்து

உககூ. தன்னைவளர்க் குஞ்செவிலித் தாய்போ னிதம்பேணி
மன்னி வளர்க்க வளர்முல்லை - யன்னதுதான்

உஉ0. தன்சிறுபற் போலரும்பு தான்படைப்பக் கண்டுசிறந்
தன்பு மலர வகமலர்ந்து - முன்பணியுந்

உஉக. தாதிய ரேவல்செயத் தாயர் களிதூங்க
மேதகு பல்லியம்வாய் விட்டார்ப்பப் - போதவிழுங்

உஉஉ. கோதை புதுவிழாக் கொண்டாடித் தன்பருவ
மாதருட னங்கன் மகிழ்போதின் - மோதுபனி

உஉ௩. மொய்வந்த தெண்ணிமய முல்லைக் கொடிபடர்ந்த
செவ்வந்தி வண்ணச் சிவக்கொழுந்து - மெய்வரைவிற்

உஉச. கோட்டுந் திருப்புயத்திற் கொன்றையொடுஞ் சொன்மாலை
பூட்டுந்தே வாரப் புலவர்களு - நாட்டுபுகழ்த்

உஉரு. தென்னந் தமிழிற் றிருவா சகப்புலவ
னென்னும் பெரியவன்பி னெங்கோனும் - பொன்னலருஞ்

உஉசு. செந்தா திலங்குந் திருக்கொன்றை வேணியர்மே
லந்தாதி பாடியவென் னம்மையு - நந்தேவர்

உஉஎ. வீதி யுலாங்கயிலை வெற்பி லரங்கேற்று
மாதி யுலாவுரைத்த வன்பனுஞ் - சோதிமலைப்

உஉஅ. பெண்பாகங் கொண்ட பிரான்மெய்ப் பதிதோறும்
வெண்பாவி னாற்புகழ்ந்த வேந்தனும் - பண்பாய்ப்

உஉகூ. பிரமனைமுன் னாட்சிரங்கொள் பெம்மானுக் கன்பாய்ப்
பரமனை யேபாடு வாரு - மருதிடங்கொள்

உ௩0. பைம்மணிக் கோவைப் பணியா பரணர்மேன்
மும்மணிக் கோவைசொன்ன மூர்த்தியுந் - தம்முருவாய்

௨௩௧. வாழ்வாரும் வாழ்த்தி வருவாரு மெய்யுருகிச்
சூழ்வாரு மெம்மருங்குஞ் சூழ்ந்துவரத் - தாழ்வில்லாத்

௨௩௨. தெய்வப் பலாவின் றிருநீழல் வீற்றிருப்போன்
சைவத் திருவீதி சாருதலு - மையற்

௨௩௩. செயல்சற் றறிவிழியாள் சேயிழையா ரோடு
மியலுற் றெதிர்போ யிறைஞ்சிக் - கயிலைக்

௨௩௪. கிரிக்கு ளமர்ந்தபிரான் கேசாதி பாதப்
பரப்பி னழகையெலாம் பார்த்தா - ளொருத்தி

௨௩௫. தபோபலம் வாய்த்தபெருஞ் சாட்சிக் கிருந்த
கபோல நகக்குறியைக் கண்டாள் - சுபாவந்

௨௩௬. தெரிந்தமட வீரிந்தத் தேவர் கபோலத்
திருந்தகுறி யென்னகுறி யென்று - டிருந்துகுயிற்

௨௩௭. பிள்ளையே யெங்கடவப் பேறே வரிவளைக்கைக்
கிள்ளைநீ யின்னமிது கேட்டிலையோ - தெள்ளுகடல்

௨௩௮. வண்ணனறி யாப்பதமில் வாயில் வரத்தவஞ்செய்
பெண்ணமுது கைபடைத்த பேறுகா - ணெண்ணரி

௨௩௯. லருவுருவ மில்லா வரனைக் கருணைத்
திருவுருவஞ் செய்தாள் செயல்கா - ணிருநயனந்

௨௪0. துள்ளிமுத்தங் கொள்ளமனந் தூயதிருப் பொன்னனையா
ளள்ளிமுத்தங் கொண்டவடை யாளங்கா-ணொள்ளிழையாய்

௨௪௧. கண்டருணீ யென்னவுட்கொள் காதல் புறந்தெரியக்
கொண்ட புளகக் குறிப்பெய்த - வண்டுதேக்

௨௪௨. கேட்டு மலருங் கிளர்தா மனைமுகைபோ
லீட்டிய செவ்வி யெழில்படைத்தாண் - மீட்டிவளைப்

௨௪௩. பார்த்ததும் பாரா ததுவுமாய்ப் பைங்கொன்றைத்
தீர்த்தனு மந்தத் தெருவகன்று - ளோர்த்த

௨௪௪. சிறுநா ணுறுமடமின் செய்கைதெரி வில்வேள்
சிறுநா ணொலிதுலக்கிச் சென்றான் - மறுதெருவிற்

மங்கை.

௨௪௫. சட்டமிடும் வில்வே டௗநா யகப்பட்டங்
கட்ட வளர்ந்த கவின்மங்கை - முட்டவசைந்

௨௪௬. தார வளைந்துவண் டாடுமிடை யுங்கருத்தும்
பார மறிந்த பருவத்தாள் - வீரமிகும்

௨௪௭. வாட்கைக் குமரருக்கு மையற் பிணிகொடுத்து
மீட்கத் தெரியும் விழியினாள் - வேட்கைதரும்

௨௪௮. வானிற் சுரபியின்பால் வண்மையுடைக் கற்பகப்பூந்
தேனிற் கலந்தனைய செவ்விதழாண் - மேனிற்குங்

௨௪௯. காருலவு தண்ணங் கடல்போ லகன்றுபரந்
தாரமுதங் கொப்புளிக்கு மல்குலாள் - சோர்வுதர

௨௫0. வன்போர் புரிபொருவின் மன்மதன்ற னூலினுக்குப்
பொன்போ லுரையறிந்து பூரிப்பா - ளொன்பிறவி

௨௫௧. யெண்ணைப் பறித்தெறியு மீசன்போன் மாலானோர்
கண்ணைப் பறித்தெறியுங் காட்சியாள் - வண்ணத்

௨௫௨. திருமுகத்தெய் வீகநிறச் செந்தா மரையு
மருமுகக்குங் கூந்தனிற வண்டுங் - கரியவிழி

௨௫௩. யார்ந்தநீ லோற்பலமு மாம்பல்வாய்க் கிஞ்சுகமுஞ்
சார்ந்த திருநிறத்துச் சண்பகமும் - பூந்தரள

௨௫௪. மாலை முலைக்கோங்கும் வாய்ந்த நகைத்தளவுங்
கோல மினிய கொழுங்குமிழு - நூலினிடை

௨௫௫. வல்லியுஞ் செங்கை மலர்க்காந் தளுஞ்சரண
பல்லவமு மற்றெவையும் பார்த்தருளி - நல்லவர்பாற்

௨௫௬. போதுதிரு வுள்ளத்துப் புட்பவனக் கோயிலா
ரீதுமொரு புட்பவன மென்றெண்ணக் - கோதகல

௨௫௭. மேய திருவழகின் மெய்யு மவயவமுந்
தூய நிறத்திற் றுலங்குவாள் - சாயலிய

௨௫௮. லொத்த பருவத் துயிர்ப்பா வையர்சூழச்
சித்திரமா மண்டபத்திற் சென்றிருந்து - முத்தமுலை

௨௫௯. விம்மநைய நுண்ணிடையாள் வெண்முத்த மிட்டிழைத்த
வம்மனை வாங்கியெறிந் தாடவவை - தம்ம

௨௬0. திருமுகச் செவ்விதிரு டத்திகழ்விண் டிங்கள்
வருவதுவும் போவதுவு மான - விருகை

௨௬௧. வனச மலர்மாறி மாறிவிளை யாடு
மினியகனி யன்னங்க ளென்னப் - புனைகுழற்குத்

உசுஉ. தோற்ற முகிறிறையாத் தூமுத்தின் பந்துநிரை
போற்றிவர விட்ட புதுமையென - வேற்றதனைக்

உசுங. கொள்ளா தெடுத்தெறியுங் கொள்கையென விண்முகில்பின்
றள்ளாது மீளத் தருவதென - வள்ளல்பாற்

உசுச. றாதுவிடு மன்னமெனத் தொல்லையனங் காணாத
நாதனென மீளு நலமென்ன - மாதரசி

உசுரு. யம்மானை யேந்துகரத் தம்மானை யேபாடி
யம்மானை யாடு மளவிலே - பெம்மான்சூழ்

உசுசு காராழித் தேர்முதுகு காட்டக் கதிர்வெய்யோ
னோராழித் தேரொதுங்கி யோட்டெடுப்பக் - கூராழி

உசுஎ. பாதலக் கங்கை படியநெடுங் கூவிரம்போய்
மீதலக் கங்கை மிசைப்பொங்கப் - போதருதேர்

உசுஅ. மேல்வெண் டுகிற்கொடிகள் விண்ணஞ் சுரநதியின்
பால்வெண் டிரைபோற் படிந்தாடச் - சேல்கொண்

உசுகூ. டிருக்குந் திருக்க ணுமையம்மை பாகத்
திருக்குந் திருப்பூவ ணேசன் - றிருக்கொன்றை

உஎ0. மாலை யழகன் வரும்பவனி தானுரைக்கும்
வேலைதிரு வம்மனைகை விட்டெறிந்தாள் - சேலை

உஎக யிடைக்கு ளிறுக்கி யெழுந்தாணற் றாயர்
பிடிக்கப் பிழைத்துப் பெயர்ந்தா - டடுக்குஞ்

உஎஉ. செவிலியர்க்குந் தப்பித் தெருவிற் புகுந்தா
ணவிலியற்கை வாசமலர் நங்கை - சிவபிரான்

உஎங. றெய்வத் திருமார்புந் திண்டோளும் பொன்னனையாள்
கைவைக்குங் கோலக் கபோலமுஞ் - சைவத்

உஎச. திருநீறு சண்ணித்த தெய்வச்செம் மேனி
யருணீர்மை குன்றா வழகும் - பெருவாழ்வு

உஎரு. பெற்றதுபோற் கண்டு பெரிதிறைஞ்சிக் கண்பனிப்ப
முற்றுமுடல் பூரிக்க முன்னின்று - நற்றவர்சேர்

உஎசு. விண்ணூர்ந்த வெள்ளிமலை மேலிருக்குஞ் செந்தேனுக்
கண்ணூர்ந்து பார்த்து ளயர்வுற்றா - டண்ணூர்

உஎஎ. விதுக்குடி யேறுசடை வேதியன் மோகம்
புதுக்குடி யேறுநெஞ்சு பூண்டாள் - மதுக்குமிழி

உஎஅ. செற்றிய வெண்டரளச் செங்கனிவாய் நெஞ்சத்து
ளூற்றதுயர் பாங்கியருக் கோதினாள் - மற்றவரும்

உஎகூ. பொன்னே கிளியே புதுமயிலே யன்னமே
மின்னே மதன விசயமே - யன்னைக்

உஅ0. கொடியார் தடுத்த கொடுஞ்சகுன மீதென்
றுடனே குயிலுக் குரைத்தார் - மடவரலு

உஅக. மற்றதுமெய் யென்று மயங்கி யறிவழிந்து
பொற்றொடி வீழப் புலம்புற்றாள் - முற்று

உஅஉ. முரியார் கடைக்கணித்த தூங்குவட்கோ வேட்கோ
தெரியா தெனவயிர்க்கச் சென்றாள் - பொருவேண்

உஅஙு. மதுவிருந்த மென்சாப வாளியின் வாய்க்குப்
புதுவிருந் தாயினாள் பூவை - மதியா

மடந்தை.

உஅச. ரினத்தைப் பொருவே ளிரதிமேல் வைத்த
மனத்தைத் திருப்பு மடந்தை - வனத்தவகி

உஅரு. லாவி முடித்தினொரு ராவி முடிக்கவெனச்
சீவி முடித்த திருக்குழலாள் - பூவுலகி

உஅசு. லாற்றுவன் காமுகர்த மாயுளை ளெண்ணியெண்ணிக்
கூற்றுவன்பார்க் கப்பார்க்குங் கூர்விழியாள் - சாற்றரிய

உஅஎ. கைசிவக்கக் காமவேள் கண்சிவக்க வாடவர்த
மெய்சிவக்க வாய்சிவக்கு மெல்லிதழாண் - மொய்முனிவர்

உஅஅ. சாபம் பறக்கத் தவம்பறக்க மால்பிறக்கச்
சோபம் பெறப்பிறக்குஞ் சொல்லினாள் - கோபமதன்

உஅகூ. போர்வளர நாணொசை போய்வளரப் பேராசை
வேர்வளர மேல்வளரும் வெம்முலையா - டேர்மலயக்

உகூ0. கால்வளைய வேள்சிலைவன் கைவளைய வாடவரை
மால்வளையப் போய்வளையும் வாணுசுப்பாண்-மேல்வருமன்

உகூக. புள்ளூற வாசைகிடந் தூற்றூற வாயூற
வள்ளூ றமுதூறு மல்குலா - டுள்ளுவிழி

உகூஉ. சுற்றமனஞ் சுற்றமனந் தூயோர்க்கு மாசைதலை
சுற்றவுடை சுற்றுந் துடையினாள் - வெற்றிமதன்

௨௯௩. றோர்நடக்க மூன்றுலகுஞ் செங்கோ னடக்கமிகும்
போர்நடக்கத் தானடக்கும் பொன்னடியாள் - சீர்நடக்குந்

௨௯௪. தெண்ணிலா முற்றத்திற் சென்றிருப்ப வோர்விறலி
யெண்ணிலா நேயத் தெதிர்நின்று - கண்ணிலான்

௨௯௫. கண்பெற்ற தென்னமதன் கைகுவிக்குந் தெய்வமே
மண்பெற்ற செல்வ மடந்தையே - பெண்பெற்ற

௨௯௬. பேறே யெனவாழ்த்தப் பெண்ணரசி கொண்டாடி
வீறு ரிசையின் விறலியே - யாரூர்

௨௯௭. திருக்கங்கை வார்சடையார் தென்பாண்டி நாட்டி
லிருக்குந் தலங்கள்பா டென்னப் - பெருக்கந்

௨௯௮. திகழ்பூ வுலகிற் சிவலோக மென்னப்
பகர்கூட லாலவாய் பாடி - மிகமால்

௨௯௯. பிறிக்கு மடியார் பிறவிக் கருவேர்
பறிக்கும் புனவாயில் பாடிக் - குறிக்குமால்

௩௦௦. சங்கந் திகிரி தணந்துமழு மானேந்து
நங்கள்குற் றால நகர்பாடித் - திங்கொருபாற்

௩௦௧. பெண்மைத் திருக்கோலப் பெம்மா னினிதுறையு
முண்மைத் திருவாப்ப னூர்பாடித் - திண்மையற

௩௦௨. வாட்டும் பிறவி வழிமுடித்து ஞானவழி
காட்டுந் திருவேடகம்பாடி - நாட்டின்

௩௦௩. விரவுதிரு வெண்ணீற்றின் மெய்யன்பர் கூட்டம்
பரவுதிரு நெல்வேலி பாடிப் - புரவுமுனை

௩௦௪. சேர்திருவி ராகவன்முன் சேனையுடன் கண்டுதொழச்
சார்திருவி ராமேச் சரம்பாடி - யோர்தருபொற்

௩௦௫. கொம்பரனு டானையொரு கூறிலங்குங் கோலத்து
நம்பரனு டானை நகர்பாடி - வம்பர்

௩௦௬. புரங்குன்ற வாணைசெய் பொன்மலைவிற் செல்வன்
பரங்குன்ற மாநகரம் பாடி - யுரங்கொள்

௩௦௭. விடைக்குஞ் சரமுகைப்பார் வீற்றிருக்கக் காணி
படைக்குந் திருச்சுழியல் பாடிக் - கிடைக்குமகத்

௩௦௮. தாசையுடைச் சிற்சபையி லையன் றிருச்சிலம்பி
னோசை யுடைத்திருப்புத் தூர்பாடித் - தேசுநலந்

V.B. SUBRAHMANYA SARMA TAMIL PUNDIT

௩௦௯. தாங்குதிருத் தேர்வீதிச் சைவா கமம்வேத
மோங்குதிருக் கானப்பே ரூர்பாடி - வாங்குந்

௩௧௦. தனிக்கொடுங் குன்றமதன் றன்னை யெரித்தார்
பனிக்கொடுங் குன்றநகர் பாடித் - தொனிக்குமறைப்

௩௧௧. பாவணம் பாடும் பரமன் றிருக்கோயிற்
பூவணம் பாடும் பொழுதிலே - நாவணங்கு

௩௧௨. நாதன் புதல்வர் நவினான் மறைபாடக்
கீத விசைகின் னரர்பாடக் - கோதிலாச்

௩௧௩. சூழிசை வீணைகொடு தும்புரு நாரதர்தா
மேழிசை ராக வியல்பாட - வாழ்முனிவர்

௩௧௪. பன்னியர் பல்லாண்டு பாடத் தருநாட்டுக்
கன்னியர் தேவகா னம்பாட - வின்னிசையாற்

௩௧௫. றெய்வப் புலமைத் திருமு தலிமூவர்
சைவச் சுருதித் தமிழ்பாட - வுய்விக்குஞ்

௩௧௬. சேணுலவு தெய்வத் திருநீல கண்டயாழ்ப்
பாணர் தமிழ்மாலைப் பண்பாடப் - பூணரக்கன்

௩௧௭. கைநரம்பிற் பாடக் கருணைபுரி வள்ளலார்
மெய்நிரம்பு மாமறுகின் மேவுதலுஞ் - சொன்னிரம்பு

௩௧௮. பண்ணா ரிசைவிறலி பாடுந் தலமெல்லாங்
கண்ணாரக் கண்ட களிகொண்டாள் - பெண்ணா

௩௧௯. ரமுதமெதிர் சென்றுசெம்பொ னாலத்தி காட்டிக்
குமுத மலர்மலர்வு கொண்டாள் - விமலரே

௩௨௦. யென்றா ளுமக்கபய மென்றாள்கண் ணீர்ததும்ப
நின்றாணின் றாடனக்கு நீராளுங் - குன்றாளு

௩௨௧. மின்னிறத்த கொன்றையந்தா ரீந்தனரோ வென்றயிர்க்கப்
பொன்னிறத்தை யீந்தரனார் போயினார் - பின்னொருத்தன்

௩௨௨. போடுங் கணைநுழைந்த புண்வழியிற் றென்றலூ
டாடுந் துயருழந்தா ளாங்கொருத்தி - சேடன்

## அரிவை.

௩௨௩. பகைகொண்டு பண்டு விரித்த படம்போ
லகல்கின்ற வல்கு லரிவை - யுகிர்கொண்டு

கஉச. முன்னொருகோ பத்தான் முடியரிந்த சங்கரற்குப்
பின்னொரு கோபம் பெயர்த்துவரி - னன்னவரை

கஉரு. யேவர் தடுப்பரென வெண்ணி யயன்பயந்து
தேவர் பெருமான் றிருவுள்ள - மாவதற்கா

கஉசா. மின்னைத் திரட்டி மிகப்பிழிந்து சாம்புநதப்
பொன்னை யுருக்கிப் புடமிட்டுப் - பின்னையொன்றாய்க்

கஉஎ. கூட்டிப் பிடித்துக் குழைத்துமதி நுட்பமெலாங்
காட்டித் தனித்திருந்து கைவருந்தப் - பூட்டியமு

கஉஅ. தூறு பருவத் தொருபெண் ணுருவாக்கிக்
கூறு மழகைக் குடியேற்றி - வீறு

கஉகூ. நலமுற்ற பெண்க ளலத்திற் றெரிந்து
திலமத் தனையெடுத்துச் செய்த - நிலைபெற்ற

கநO. பிள்ளைக் குதலைமொழிப் பெண்ணழகு மிவ்வழகுக்
கெள்ளத் தனையு மிலையென்ன - வுள்ளத்திற்

கநக. கங்கை வெதும்பமலைக் கன்னி கலங்கமற்ற
நங்கையர் சங்கையிலா நாணெய்தத் - திங்களணி

கநஉ. முக்கணனார் மேனி முழுவதுங் கண்வேண்டு
மிக்கன் னியைப்பார்க்க வென்றுரைக்க - வக்கணமே

கநந. வண்ண மலர்வேளும் வாகை தரிக்கவெங்கள்
கண்ணுதன்முன் விட்டனைய காட்சியா - லெண்ணிறந்த

கநச. பாங்கியர் நிற்கவுயிர்ப் பாங்கி யுடனேறி
யோங்கிய செய்குன்றி னுள்ளிருத்தி - யாங்கவட்குத்

கநரு. தென்னர் செழுங்களபச் சேறணிந்தா டானணிந்த
பொன்னா பரணமெலாம் பூட்டினாண் - மின்னுடன்

கநசா. பொற்பூர் சரீரத்தைப் புல்லி யகமகிழ்ந்தாள்
கற்பூர தாம்பூலங் கைக்கொடுத்தாள் - பிற்பாடென்

கநஎ. னானு ருயிர்நீயென் னுள்ளாக் கருத்தெல்லா
மானே யறியாயோ மற்றென்ன - யானறியப்

கநஅ. போமோசொ லுன்கருத்தைப் பூவணங் கோயில்கொண்டார்
தாமே யறியத் தகுமென்ன - வாமே

கநகூ. யவரறிவ துன்னைக்கொண் டல்லவோ வென்றாட்
கெவரறிவுந் தாமறியு மீச - னவிர்சடையான்

௩௪0. பின்னழகுக் கொப்புரையாப் பேரம் பலவாணன்
றன்னழகுக் காருமொவ்வாத் தானுவின் - குன்னழகு

௩௪௧. பார்க்கவே நாளைப் பவனிவரு மென்பளவிற்
கார்க்குழல்கேட் டுள்ளங் களிப்பெய்தித் - தீர்த்தன்மே

௩௪௨. லாசை யினும்விரிவா வல்குல்பூ ரிப்பழலை
வீசிய விண்ணை வெளியடைப்ப - மாசகலுங்

௩௪௩. கன்னி புளகமுறுங் காலையின் மாலைபெற
மன்னிய காமம் வளர்ந்தேற - வந்நேர

௩௪௪. மாலைவரக் கண்டாண் மயங்கி மறலிநிறஞ்
சால முழுச்சிவப்போ தானென்றாள் - காலரவம்

௩௪௫. போலவரக் கண்டு பொதியின் மலைப்புலியை
வாலுருவி விட்டான் மதனென்றாள் - பாலுருவி

௩௪௬. விட்டதுபோல் வெண்ணிலவு வீசுவதை வெண்ணொருப்
சுட்டநெருப் பேதென்று சொல்லிணாண் - முட்டக் [பாச

௩௪௭. குயில்வாய் விடமிருப்பக் கூற்றுதைத்தா ரென்னே
யியல்வேலை நஞ்சுண்ட தென்றாள் - செயன்மாரன்

௩௪௮. றுழை மலரணியாத் தன்பகைவன் மேலெய்யா
தேழையெனை யெய்யுமதி யென்னென்றாள் - சூழ

௩௪௯. வுருகு மினத்தோ டுயிர்த்துயிர்த்து நெஞ்சஞ்
சருகுபட வாடித் தளர்ந்து - முருகிதழித்

௩௫0. தாமக் கடவுடிரு வஞ்செழுத்தே தாம்புணையா
யாமக் கடனீந்தி யேறினாள் - சோமக்

௩௫௧. கடவுட் சடாமவுலி காலைவரு மென்றென்
றடர்பொற் பணிதிருத்தி யாடை - யிடையிறுக்கி

௩௫௨. மின்னனையா ளில்கடந்து வீதிவந்தா ளவ்வளவிற்
பொன்னனை யாண்மனைக்குப் போயினேன் - றன்னனைய

௩௫௩. நற்றோர் வரக்கண்டா ணாளைவரு மென்றுரைத்த
குற்றேவற் பாங்கியைமுன் கும்பிட்டாள் - பிற்றேவர்

௩௫௪. தேவனைக்கும் பிட்டா டிருத்தோ ணலங்கண்டாள்
காவிமைக்க ணாற்பருகிக் காமுற்றாண் - மேவுசெக்கர்

௩௫௫. மாலைத் துயரொழிய வஞ்சி வலக்கண்ணாங்
காலைக் கதிர்கண்டு கைதொழுதா - ளாசித்துப்

௩௫௬. பையவருந் தென்றற் பகைதீர வெம்பெருமான்
செய்யதிரு வாபரணஞ் சேவித்தாண் - மையற்

௩௫௭. கரணும் புயத்தானை யம்புலிப்போர் நீங்கச்
சரணும் புயத்தலரிற் றாழ்ந்தாண் - முரணார்

௩௫௮. வரிக்குயிலுக் கஞ்சுதொழின் மாற்றப் பெருமான்
றிருக்கரத்தைக் கண்டுதரி சித்தாள் - கருப்புவிற்கை

௩௫௯. பூணு மதனடத்தும் போர்தவிரப் புட்பவன
வாணனுதற் கண்கண்டு வாழ்த்தினாள் - பாண்மிழற்றும்

௩௬0. வண்டார் குழனெருநல் வந்தபகைக் குப்பகைதான்
றண்டா வரனுருவிற் றான்கண்டாள் - கண்டோமென்

௩௬௧. றானந்த மூழ்கி யறிவுவரு முன்றிருத்தேர்
தானந்த வீதியொரீஇச் சார்ந்ததான் - ஞானந்தான்

தெரிவை.

௩௬௨. றேற்றமிகப் பேரின்பந் தேடுமவ ராசைக்கு
மாற்றுமருந் தென்ன வருந்தெரிவை - சாற்றயன்மால்

௩௬௩. கற்பத் திருணிலவோ காய்பகலோ வென்னமிகப்
பொற்புற் றிருள்பழுத்த பூங்குழலாள் - கற்பத்துச்

௩௬௪. சீலக் கடல்குளமோ சிற்றோடை யோவெனநீ
ணீலப் பெரிய நெடுங்கண்ணாள் - கோலமுந்நீர்க்

௩௬௫. கண்ணாற் பவளங் கறுப்போ விளர்ப்போவென்
றெண்ணச் சிவந்த விதழினாள் - விண்ணமுதங்

௩௬௬. காறி யுமிழ்புளிப்போ கைப்போவென் றிந்திரன்வா
யூறிவரத் தித்திக்கு மொண்சொல்லாள் - வீறியபொன்

௩௬௭. மேருச் சிறுபந்தோ மென்கழங்கோ வென்னமிகப்
பாரித் தெழுந்த பயோதரத்தாள் - சீரித்து

௩௬௮. வாய்ந்த விழையுரலோ வன்றாண மோவெனப்போய்த்
தேய்ந்து சிறுத்தொழியுஞ் சிற்றிடையா - ளாய்ந்தவைய

௩௬௯. மெல்லாமோர் கையளவோ வில்லையோ வென்னவிண்மேற்
செல்லா மணிநிதம்பத் தேரினாள் - வில்லேறும்

௩௭0. பஞ்சி பரலோ பனிநெருஞ்சி யோவெனவுள்
ளஞ்சிமுகஞ் சேக்கு மடியினாள் - விஞ்சுபுகழ்

௩எக. சேர்க்குந்தென் பூவைத் திசைபோல யாவரையும்
பார்க்குந்தோ றும்மயக்கும் பண்பினள் - கூர்க்கு

௩எஉ. மரிவைப் பருவத் தருட்பூவ ணேசன்
கருணைப் பவனிவரக் கண்ட - பரிசினற்

௩எ௩. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரு மயலினள் - சாலமணந்

௩எச. தைவந்த காவிற் றனித்திருந்தோ ரோவநூல்
கைவந் தவனைக் கடிதழைத்து - மெய்வந்த

௩எரு. பூவண வாணனஞ்சொற் பொன்னனையாட் கன்றளித்த
மாவணக் காதை வகுத்தெழுதி - யோவியத்திற்

௩எசா. காட்டு கெனநிறைபொன் கைக்கொடுப்ப வோர்படத்திற்
றீட்டி யவனவண்முன் சென்றிருந்து - தோட்டலர்பெண்

௩எஎ போதரசு கையாற்செய் பொன்னனையாய் பொன்னனையாண்
மாதரசு வாழ்பொன் மனையிதுபார் - கோதை

௩எஅ. புலரியிற் போந்து புனல்வையை கைமேற்
பலனுய்க்க மூழ்கும் படிபார் - நலனுய்க்குங்

௩எகூ. கண்மணி பூண்டுமனங் காமுறுவெண் ணீறணிந்து
பெண்மணியன் னளிருக்கும் பெற்றிபா - ருண்மைத்

௩அ0. தபத்தியானப் பெண்ணரசு தாழ்விலெழுத் தஞ்சுஞ்
செபத்தியானஞ் செய்யுஞ் செயல்பார் - சுபத்தியானஞ்

௩அக. செய்து சிவனைத் திருவர்ச் சனைமுடித்துக்
கைகுவித்து மாதிருக்குங் காட்சிபார் - பெய்வளையா

௩அஉ. ளாயத் தொடும்பூவை யங்கணனைச் சேவிக்கக்
கோயிற் புகுந்துநின்ற கொள்கைபா - ரேயத்

௩அ௩. திருத்தஞ்சி லோதி திருமுன்பு சுத்த
நிருத்தஞ்செய் கோல நிலைபார் - நிருத்தம்

௩அச. புரிந்தங்கு நின்றரிதிற் போந்து மனைக்குட்
பரிந்தங் கிருக்கும் படிபா - ரருந்த

௩அரு. முருந்து நகைமனைக்குண் மொய்த்தீண்டிச் செல்லுந்
திருந்துதிருத் தொண்டர் திரள்பார் - வருந்தங்க

௩அசா. ளைய னடியாரை நண்ணி யெதிரிறைஞ்சித்
தூய வமுதருத்துந் தோற்றம்பார் - மேயசிவன்

௩௮௭. றன்னுருவம் பொன்னுருவ மாகச் சமைக்கவிளங்
கன்னி சமைத்த கருவுருப்பா - ரன்னந்

௩௮௮. தொடுத்த கருத்தறிந்து சுந்தரப்பே ரண்ண
லெடுத்தசித்த வேடத் தெழில்பார் - வடித்தவயி

௩௮௯. லொத்தவிழி மாளிகைமு னுற்றொருபால் யோகபட்டச்
சித்தரிறு மாந்திருக்குஞ் செய்கைபா - ரத்தகைமை

௩௯௦. கண்டெதிர் சென்றுமலர்க் கால்பணிந்தன் பென்னுமயல்
கொண்டெதிர் நிற்குமவள் கொள்கைபார் - வண்டுளரு.

௩௯௧. நெய்ய குழல்வருந்து நின்கருத்தே தென்றெங்க
ளய்யர் முறுவ லரும்புதல்பார் - தையலரி

௩௯௨. காணாத் திருவுருவங் காணுங் கருத்தரவப்
பூணார்க் குரைக்கும் புதுமைபார் - நீணாகச்

௩௯௩. சித்த ருரைப்படியத் தேமொழியில் விற்கரும்பொ
னத்தனையு முன்புவைத்த வார்வம்பார் - வைத்ததன்மே

௩௯௪. னீற்றைச் சிதறியையர் நேரிழைநீ யித்தையெரி
யேற்றப் பசும்பொன்னா மென்பதுபார் - கோற்றொடியுங்

௩௯௫. கட்டுசடைச் சித்தர் கருதுமுறை யேயெரிபெய்
தட்டகரும் பொன்செம்பொ னானதுபார் - வட்டமுலைக்

௩௯௬. கொம்பனாள் பூவணத்தெங் கோமானை யாணிதீர்
செம்பொனாற் கண்ட திருவுருப்பார் - விம்பவாய்

௩௯௭. வள்ளிமுத்தங் கொள்ளு மகப்பெற்றோன் மேனியைக்கண்
டுள்ளிமுத்தங் கொள்ளுமவ ளன்புபார் - வெள்ளிவெற்ப

௩௯௮. னன்புக் கிளகியவ ளங்கை நகரேகை
தன்பொற் கபோலந் தரித்ததுபார் - வன்பிற்

௩௯௯. பிடித்த விரதப் பெரும்பேறு பாவைக்
கடுத்த விசேட மதுபார் - முடித்தகுழன்

௪௦௦. மாதேயென் றேவநூல் வந்தோன் வகுத்துரைக்கும்
போதே விரகம் புறம்பொசியக் - காதார்

௪௦௧. குழையாள் குழைந்தறிவு கொள்ளைபோய் நெஞ்சந்
தழையாமை நின்று சருகாம் - பொழுதிற்

௪௦௨. றிளைத்தவுமை யம்மை திருக்கையால் வைத்து
வளர்த்த தருநிழலில் வாழ்வோன் - கிளைத்துமனப்

௪0௩. பத்தி மலரவந்நாட் பானு வழிபட்டோ
னத்தி மலர வருள்செய்தோன் - முத்தி

௪0௪. மலரமலர் புட்ப வனத்தான் பவங்கள்
புலரவருந் தேவி புரத்தான் - குலவு

௪0௫. நளச்சக்ர வர்த்திகலி நாசஞ்செய் நாத
னிளச்சக்ர வர்த்திபணி யெம்மான் - வளைச்சக்ர

௪0௬. நீளத்தான் காணாத நீளத்தான் றேவிபுக
ழுளத்தான் சங்கார தாண்டவத்தான் - கேளொத்தான்

௪0௭. பூவணத்தெங் கோமான் பொலந்தேர் மறுகணைய
வேவணக்கண் மின்கேட் டெதிர்சென்று - டவணத்தன்

௪0௮. றெய்வத் திருமேனிச் செஞ்சோ தியுமுகமுங்
கைவைத்த வீரமழுக் காட்சியு - முய்வித்த

௪0௯. காவித் திருநீல கண்டமுங் கொன்றையந்தார்
மேவிப் பரிமளிக்கு மெய்ப்புயமுந் - தாவிப்

௪௧0. பொழியுங் கருணைப் புனிதநதி பொங்கி
வழியுந் திருக்கண் மலரு - மொழியுமறைப்

௪௧௧. பண்மணக்குஞ் சீதப் பவளத் திருவாயும்
விண்மணக்குங் கங்கை விரிசடையும் - பெண்மணக்குஞ்

௪௧௨. செம்பாதி யும்போய்த் தெரிசித்தாண் மார்பிருக்கும்
வம்பார் முலைத்தழும்பை வாழ்த்தினாண் - மொய்ம்பேறுஞ்

௪௧௩. சீல வளைத்தழும்பின் சீர்புகழ்ந்து பொன்னனையாள்
கோல நகக்குறியைக் கும்பிட்டா - ணீலமிடற்

௪௧௪. றெந்தையை நோக்கி யிதழித் திருப்புயத்தால்
வந்த விரகநோய் மாற்றுதற்குச் - சொந்த

௪௧௫. மருந்தறியீர் வேளூர் வயித்தியரென் றுங்கே
யிருந்தபரி சென்னோ வியம்பீர் - திருந்துகையி

௪௧௬. னிற்குந் தொகைவளையை நீர்கொண்டீர் கூடலிலே
விற்குந் தொழின்மறந்து விட்டீரோ - நற்கள்

௪௧௭. வழியுமலர்க் கொன்றைதர மாட்டீர்க்கா ரூரின்
மொழியும் பெயரென் மொழியீர் - பழியஞ்சு

௪௧௮. மாட றவிர வறுபத்து மூன்றோமுன்
கூட னகராடல் கூறுவீ - ரோடுகண்ணீ

சககூ. ரூற்றை மறிக்க வுபாயமறி யீர்வையை
யாற்றை மறிக்க வறிவீரோ - சாற்றீரென்

சஉ0. றன்னமுளைத் தாளரனு ராகத் தழுகியமின்
றன்னைநினைத் தஞ்சினார் தார்கொடுக்கப் - பின்னைமதன்

சஉக. காவி யொழிந்த கணைகிடக்குந் தூணியெனப்
பாவைகிடந் தாணடந்தான் பைந்தாரான் - பூவை

சஉஉ. யுரிய வுடற்குயிருண் டென்ன வுயிர்த்து
நிலாவலையார்க் கையத்தை நீத்தா - டெரிவைக்

பேரிளம்பெண்.

சஉங. கடுத்த பருவ மலர்வே ளிரதி
யெடுத்தனைய ளாம்பே ரிளம்பெண் - டொடுத்தமத

சஉச. னீலவம் பொன்றொழிய நின்றநா லம்புசெயுஞ்
சிலமுங்கண் டெவ்வெவர்க்குஞ் செப்புவாள் - சால

சஉரு. வினைநீடு மன்மதவேள் வேதாந்த சாரத்
தனுபோக முற்று மறிந்தா - டனிமூவர்

சஉசு. கானத் திருமுறையைக் கைவிடாள் பண்ணோடும்
பானற் பெருவிழியாள் பாடுவா - ளானையுரித்

சஉஎ. தாளைச் சயிக்கவிரண் டானை தலைகீழாப்
பாரப் பெருந்தவஞ்செய் பான்மைபோல் - வாரொன்

சஉஅ. முகபடா நீக்கி முனிந்தா டவர்மே
லிகலிக் கிரிவீ ழிபம்போ - லகமகிழ

சஉகூ. வுந்தி மடுவென் றுளைக்கு மதுபார்க்க
வந்த துணைச்சக்ர வாளம்போன் - முந்தத்

சஙo. திருப்பனந் தாளிலிங்கந் * திண்கலைச்சிக் காக
விருப்பினுடன் சாய்ந்த விதம்போற் - பருப்பதம்போ

சஙக. லின்னம் பருக்கி லிடைதாங்குந் தாங்காதென்
றுன்னி யதுபார்க்க வுற்றதுபோற் - றன்னைவிழை

சஙஉ. மாந்தருக்கு மோக மகோததியைக் கையணைத்து
நீந்தக் கவிழ்த்தகுட நீர்மைபோ - னேர்ந்திட்

சஙங. டெதிர்த்துவரு வாரையெல்லா மியாஞ்சயித்தோ மென்ன
மதித்தலுத்துச் சாய்ந்த வகைபோற் - கதித்திடத்திண்

---

* 'திண்கலைச்சிக்கற்கா' என்றும்பாடம்.

சஙச. கோல்பிடித்த செங்கைக் குடைபோற் றலைகீழா
மால்பிடிக்க நின்ற மணிவரைபோற் - சால்பகல

சஙரு. மட்டுண் டடங்காது வம்பிற் றலையிட்டு
முட்டுண்டு பின்குனியு மூர்க்கர்போற் - கிட்டும்

சஙசா. வளநீல ரோம மணிக்கயிறு பூட்டி
யிளநீ ரிறக்கு மியல்போ - லிளேஞரா

சஙஎ. லாடி விசையோய்ந் தயர்ந்துவீழ் பம்பரம்போற்
கோடி முகங்கவிழ்ந்த கொங்கையா - ணீடிலகிற்

சஙஅ. றிக்கு விசயஞ் செலுத்தி மதனுவம்
புக்க விசிகம் புரைகண்ணுண் - மிக்குலக

சஙகூ. நாடுந் திருமா னடனத்தி னுற்றுகைப்புண்
டாடும் படம்போலு மல்குலாள் - கூடிய

சச0. மேல்வீசு நள்ளிருளின் மேனிதெரி யாதுநிலாக்
கால்வீசும் போதுதெரி காருடல்போ - லுன்மாடச்

சசக. செய்யநகர் வேந்தாற் சிறையிற்சின் னுள்கிடந்து
மெய்யிளைத்து மீண்டுவரு மேகம்போற் - சைய

சசஉ. மடந்தை மணவாளன் வாழ்சேதுக் கைதை
குடைந்துவரு வண்டின் குழாம்போன் - மிடைந்துமலர்

சசங. மாலேமரு வாததினுன் மாமலர் பூத்துதிர்ந்த
சோலையது போலுஞ் சுரிகுழலாள் - சாலமைக்கு

சசச. மேவு மகத்தொழிய வெண்டரள மேவிலையென்
றுவலுறத் தோட்கணியா வாரத்தாள் - பூவணத்தெம்

சசரு. புத்தமுத வாரியின்மேற் பொன்னனையாள் வைத்தபரி
வத்தனையும் வைக்கு மளவினுண் - மெத்தநிலை

சசசா. யோங்கு மணிமாடத் துள்ளோ ரரியணையிற்
பூங்கவரி கால்வீசப் போயிருந்து - பாங்குறையு

சசஎ. முற்பருவப் பெண்கட்கு மோகனு லவ்வவர்தஞ்
சொற்பருவங் கண்டுகண்டு சொல்லுங்காற் - பொற்பிற்

சசஅ. சிலர்கேட்கப் பாடஞ் சிலர்கேட்க வர்த்தஞ்
சிலர்கேட்கச் சங்கை தெளிவித் - துலகேழின்

சசகூ. மன்மதனுல் கைவந்தோர் மற்றிலையென் றுசிரியத்
தன்மை செலுத்துந் தறுவாயிற் - றென்மை

௪௫0. யவனசை யாம லனுவசையா தென்னும்
புவனப் பழமொழிக்குப் புத்தே - ளுவமை

௪௫௧. தெரிக்குந்தெய் வங்கள் சிகாமணி தோன்றி
மரிக்குந்தெய் வங்கண் மணாளன் - பரிக்கு

௪௫௨. மயனுக்கு மிந்திரற்கு மங்கேழ் முராரி
நயனற்குந் தேவர்க்கு நாயன் - பயனொக்கும்

௪௫௩. வையைநதித் தீரன் மணிகர் ணிகைத்தீர்த்தன்
சைவநிறை புட்பவனத் தம்பிரான் - றெய்வமறை

௪௫௪. யார்ப்பவனி யெங்கு மதிரக் கறங்குதிருத்
தேர்ப்பவனி வீதிவரல் செப்பினார் - போர்ப்பவனி

௪௫௫. சென்றிளைஞ ராவி செகுத்துண்ணுங் கண்ணார்க்கு
மன்றவுரை செய்நூன் மறந்தெழுந்தாண் - முன்றில்

௪௫௬. கடந்தா டிருவீதி கண்டாடோர் முன்னே
நடந்தாள் சிவனை நயந்தா - டடந்தேனை

௪௫௭. யோடாமை வேண்டி யொருகோடி தண்டனிட்டா
ணீடா தரங்கூர நேர்நின்றாள் - வீடாத

௪௫௮. நாமக் கயிலைமலை நாதா புராதனா
காமப் பகையையடர் கண்ணாளா - வாமக்

௪௫௯. கவுரி திருக்கணவா கங்கைமண வாளா
பவன கவனவிடைப் பாகா - வுவமையில்பொற

௪௬0. கச்சேற்ற கொங்கைமுலைக் கன்னியரை வீதியிலே
விச்சேற்ற வந்த பெருமானே - மைச்சேற்கட்

௪௬௧. பாவணங் கோசைபயில் பாண்டிப் பழம்பதியாம்
பூவணங் கோயில்கொண்ட புண்ணியா - மேவகினைந்

௪௬௨. தானாத மாலை யடித்துமட லேந்தினேன்
றேனார்வா யூறநின்று தேங்கினேன் - னானாத

௪௬௩. வண்டு விழக்கண்ணீர் மல்கினேன் பொன்பூத்தேன்
விண்டலர் தூற்ற வெளிகின்றேன் - மண்டி

௪௬௪. வருமார்வத் தாற்றேன் மலர்க்கொன்றை யானேன்
றிருமார்வத் தாற்றணையச் செய்து - னருடாரா

௪௬௫. யென்றாளை நோக்கி யிடர்நோக்கிச் சம்பரனை
வென்றானை யீசன் விலக்கினா - னின்றாளப்

௪௬௬. பேதை முதலாகப் பேரிளம்பெ ணீறாக
மாதர் பலர்மயங்க மாதேவன் - சோதிப்

௪௬௭. படர்வார் சடையெம் பரம்பர னென்று
மடைவார் வினைதீர்க்கு மம்மா - னடியார்

௪௬௮. குழாமறாச் சந்நிதியெங் கோமா னதிரு
முழாவறாக் கோயின் முதல்வன் - விழாவறாத்

௪௬௯. தேருடையா னெங்க டிருப்பூ வணக்காசி
யூருடையான் போந்தா னுலா.

திருப்பூவணநாதருலா முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

## அழகியநாயகர்துதி.

தன்னனையார் தந்தையார் தமராரென் றறியாமற் றனித்த வுன்னைப், பொன்னனையார் வயிற்கருவிற் புகுந்ததனுன் முத்தமிடடுப் புதல்வன்போல, மின்னனையா ரிடம்பிரியா மணவாள னெனப் புரிந்த விதத்தா லன்றோ, வென்னனையார் களுந்தரிசித் தேத்தினர்பூ வணத்துறைந்தா யெளிதிற் றானே.

## சிறப்புப்பாயிரம்.

திருவால வாயரெலாம் வலசித்த ரிரதவா தஞ்செய் தற்கா, வருவாரை வணங்கவவர் மணிமுறுவல் சிறிதரும்பி மலர்க்கணேக்கக், கருவாகிப் பொன்னனையாள் பெற்றெடுத்த புத்திரனேர் கந்த சாமி, பெருவாய்மைப் பூவையுலாப் பாடியதெம் போலியர்கள் பிழைக்கத் தானே.

[இந்த இரண்டும் பழையசெய்யுட்கள்.]

மணிமந்திரவிநாயகர் துணை.

# திருப்பூவணநாதருலா

## அரும்பதவுரை.

காப்பு: சேவை - இடபத்தை. வெண்பாவை - ஸரஸ்வதிதேவி. சிரம் தந்தத்துக் கோவை அந்திவண்ணன்-சிரம் தந்தம் ஆகிய இவற்றைக்கோத்த மாலையையுடைய அந்திவண்ணன்; தந்தம்-பன்றிக்கொம்பு. கரத்து அந்தம் தந்தி வண்ணன்-துதிக்கையால் அழகுபெற்ற விநாயகக்கடவுள்; வண்ணம் - இயல்பு.

நூல்.

௬. என்ன னையார். மின்னனையாம் என் அன்னையார்; மின்னனையாரென்பது இத்தலத்தில் அம்பிகையின் திருநாமம். இங்கே ஸ்வாமியின் திருக்கோயில், அம்பிகையின் திருக்கோயிலுக்கு இடப்பக்கத்தேயுள்ளது.

௧௩. அறிந்து செய்யும் பாவம்-ஞானகிருதம்.

௧௪. புட்பம்=புஷ்பம்-அமிர்தம்; மலருமாம்.

௧௫. செம்பொற்றரு - பாரிசாதவிருக்ஷம்.

௧௬. தெருள் - தெளிவு.

௧௭. ஒருபதம் - துர்வாஸமுனிவருடைய சாபத்தால்நீங்கிய பதவியை. மணியோடை - மணிகர்ணிகா தீர்த்தம். வெய்யோன் - சூரியன். இருபதம்-இரண்டுதிருவடிகளை; ஒருபதம் வேண்டியவனுக்கு இருபதங்கொடுத்தனரென்பது மற்றொருபொருள்.

௧௭-௧௮. சதபத்திரம் - தாமரைமலர். சாபம் - பிரமதேவர் தம்சந்நிதியில் ஊர்வசியைவிரும்பினமையால், 'இனி நீ நம்முன்னர்நிற்றற்கு உரியையல்லை' எனச் சிவபெருமான் அவருக்குக் கொடுத்தருளியசாபம். அத்திரமாக - நிலையில்லாததாக. சாபம் அத்திரமாக - வில்லானது அஸ்திரமாகவென்பது மற்றொருபொருள்.

௧௯. அருக்கராகம் - சூரியன்போன்ற செம்மைநிறம்; கௌதமிநதிக்கரையிலுள்ள திரணசனனென்னும் பிராமணனொருவன் ஸ்தலயாத்திரை செய்பவனாகி இத்தலம்வந்து அம்பிகையைமட்டும் தரிசித்து ஸ்வாமியைத் தரிசியாமற்சென்ற பாவத்தால், இராக்ஷதவடிவம்பெற்றுத் துன்புற்று நாரதமுனிவருடையகட்டளையின்படி இத்தலத்துள்ள பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அவ்வுருவம் நீங்கப்பெற்று விதிப்படி தரிசித்து முத்திபெற்றனன்.

௨௦. உரு மேல் நிவந்த திருமேனி தீண்ட - திருமகளின் மேனியைத்தீண்டும்படி. வாலகில்லியமுனிவர்களை அவமதித்தகுற்றத்தால் திருமாலைப்பிரிந்த திருமகளார், இங்கேவந்து தவஞ்செய்து அப்பால் திருமாலால் அங்கீகரிக்கப்பெற்றனர்.

௨௧. மாமுகவர் - யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள்; இவருடைய திருநாமம் மணிமந்திரவிநாயகரென்பது.

௨௨. இத்தலத்துள்ள மணிகர்ணிகா தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தவிசேடத்தால், அகத்தியமுனிவர் கடனீரையுண்டருளினர்; (திருப்பூவணப்பு.சூரியன்பூ. ௬௧-ம் செய்.) தருமன் - தருமனென்னும்பிராமணன்.

௨௩. சுச்சோதிகன் - கோதாவரிநதிக்கரைக்கண்ணதாகிய போகவதிநகரத்தரசனான தேவவன்மாவென்னும் அரசன்புத்திரன். இவன் நாரத முனிவர்கட்டளைப்படி இத்தலம்வந்து ஸ்வாமிதரிசனம்பண்ணி மணிகர்ணிகையில் திலதருப்பணஞ்செய்து பிதிரர்களை முத்தியடைவித்தான். வாள் இமகரன்-ஒளியையுடைய சந்திரன்.

உ௬-உ௮. அறப்பைங்கூழ் - தருமமாகிய செவ்வியபயிர். பசும்பாதி - உமாதேவியார். தருவென்னும் எழுவாய், (உ௯) 'தழைக்க' என்பதைக் கொள்ளும். பயிரைவளர்த்தோர் தருவையும் வளர்த்தற்குரியரென்றபடி.

உ௯. முதல் - முதற்பொருள்.

உ௬ - உ௯. உமாதேவியாருடைய திருக்கரத்தால் வைக்கப்பெற்ற விருக்ஷம் கிருதயுகமுதலிய நான்கிலும் முறையே பாரிசாதம், வில்வம், வன்னி, பலாவாக ஆயிற்றென்பதை, "முதுசுவை தருமா ரமுதவிந் துவிற்றூன் முளைத்திடுஞ் சுரர்தரு வொன்று, துதிபெறு கிரேதா யுகமது முன்னுச் சொற்றகு நான்குகந் தொறுமிப், பதிதனிற் பாரி சாதமா வாரம் பன்னரு முயர்புகழ் வன்னி,திதமுறு செம்பொற் சுளைக்குடக் கனிசேர் தீம்பலா வாகியே திகழும்" (திருப்பூவணப்பு. சிதம்பரவுபதே. செய். ௧உ.) என்பதனாலுமுணர்க.

உ௯ - ௩௦. நேரா - உடன்படாத. மதித்தகை இல் யான் ஐவரை அடக்க மதித்த - புத்தியில்லாத யான் ஐம்பொறிகளாகிய துட்டரை அடக்கும்படி திருவுள்ளம்பற்றின.

௩௧. வாய்த்திடத் தான் ஈ பவனத்தினன் - வாய்த்திடும்படி தான் ஈயும் பவனத்தினன்; பவனம் - தேவருலகம். நான்மறை சொல் வாய்த்திடத்தான்-நான்குவேதங்களைச் சொல்லும் வாய்வன்மையையுடையவர், நீப வனம் - கடம்பவனம்; மதுரை.

௩௧-௩உ. கை சாத்திய நந்தன் இறை விருத்தனுச-கையில் சங்கத்தையணிந்த திருமால் பிரமதேவருடைய விரோதியாக; இறை - பிரமதேவர். வீற்றிருத்தல் - கவலையின்றியிருத்தல். நந்தல் நிறை - பெருகுதல் நிறைந்த. விருத்த நாகம் - பழமலை.

௩உ-௩௩. முந்து அரங்க ஊரவர் அம் பெற்றமாய் ஊரத் தான் கண்டோன் - முன்பு, திருவரங்கத்தையுடையவராகிய திருமால், அழகிய இடபமாய்வரும்வண்ணம் தாம் செய்தருளியவர், மீது ஊர வரம்பெற்ற மாயூரத்தான் - மற்றைத் தலங்களைக்காட்டிலும் மேலாக விசேடம்பெற்ற மாயூரஸ்தலத்தையுடையவர்.

௩௪. நடங்கொள்ளல் சேவிப்போருடைய தொழில்.

௩௫. பங்குனியுத்தரத்தில் தீர்த்தம்.

௩௭. அருணன் - சூரியன்.

௩௮. எல் மலை வில்லி - ஒளியையுடைய மேருமலையாகிய வில்லையுடையவர்.

௪௧. நித்திலத்தாளம் - இருபெயரொட்டு. ப்ரவாளம் - பவளம்.

௪உ. தவிசு-மெத்தைமுதலியன.

௪௫. அதள்ஆடை இரண்டு - புலித்தோலும் யானைத்தோலுமாகிய ஆடையிரண்டு. விலங்காடை - மிருகங்களின் தோலாகிய ஆடை, நீக்குதற்குரிய ஆடை.

௪௬. முத்துவடுகநாதேந்திரன் - முத்துவடுகநாததுரை; இவர் சிவகங்கையிலிருந்த அரசர்களில் ஒருவர்; மருதபாண்டியரென்னும் பிரபுவின் காலத்திற்கு முன்பிருந்தவர். 'தன்' என்றது, சூரியனை.

௪௮. விம்பம் - ஒளி.

௪௯. நண் இமகர மண்டலமாம்-பொருந்திய சந்திரமண்டலமாகிய.

௫௦. மணிகண்டன் - நீலகண்டர்; இரத்தினத்தையணிந்த கண்டரென்பது மற்றொருபொருள்.

௫௪. ஙளபதக்கமென வழங்கும் மூன்றுபதக்கங்கள் இன்றும் இத்திருக்கோயிலில் உள்ளன.

௫௫. கேயூரம் - வாகுவலயம்.

௫௬. கைவளை - சிறுவளை.

௫௭. சூரியன் இரத்தினச்சிலம்பிற்கு உவமம்.

௫௮. சிவபெருமானுடைய சடையில் மேகம் கிடத்தலை, "பிறையிட்ட திருச்சடையிற் பெயனன்கும் வர விடுத்தான்" (திருவிளை. வருணன்விட்ட. செய். ௧௭.) என்பதனாலுணர்க.

௫௯. முடிமேற்பெண் - கங்கை. கண்ணாடிக்குக் கங்கை உவமம்.

௬௦. உபசாரம் ஈரெட்டு - ஷோடசோபசாரம்.

௬௧. எழுதாச்சுருதி - வேதம், எழுதுஞ்சுருதி - தேவாரமுதலியவைகள்.

௬௨. இருவர் - தும்புருநாரதர்.

௬௪. திருப்பேர் - சிவகைங்கரியஞ் செய்பவர். தண்டு - திருவாடுதண்டு; அ௯: 'திருவாடு தண்டினு மேற்செல்ல' என்பர் பின்னும்.

௬௫. பஃறேவர் - பல்தேவர்.

௬௭. பாகீரதி - கங்கை. மாடு இரட்டும் - பக்கத்தில் மாறி அசையும்.

௭௦. கொடைக் கடவுள் நல் ஆன் குழாம் - கொடுத்தலையுடைய காமதேனுவின்சாதியாகிய தெய்வப்பசுவின் கூட்டத்தில். புக்கு ஆங்குநின்று விளங்க.

௭௩. பீலி - மயிலிறகாற்செய்தவிசிறி. பனைக்கைமுகன் - விநாயகக் கடவுள்.

௭௪. மூடிகத் தேர் - பெருச்சாளியாகிய வாகனம்; "அன்னத்தேரேறியயன்வலப்பால் கைபோத" என்பது ஆதியுலா. சேய் - முருகக்கடவுள்.

௭௭. சீதக்கதிர் - சந்திரன். முத்தின்தேர் - முத்துவிமானம். புட்கத்தேர் - புட்பகவிமானம். தோழன் - குபேரன்.

௭௯. பவனன் - வாயுதேவன்.

௮௦. பதினொருருத்திரர் பதங்களிலும், ஐயனார் புரவியிலும், வைரவக்கடவுள் ஞாளியின்மீதும் போந்தார்; ஞாளி - நாய்.

௮௧. எண்மர் - அஷ்டவசுக்கள். இருவர் - மருத்துவர்.

௮௨ - ௮௩. தந்தைதாய் - சிவபெருமானும் உமாதேவியாரும். வேணுபுரம் - சீகாழி. பிள்ளை - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். இவர், சீகாழியில் திருத்தோணியின்மீதுள்ள உமாமகேசத்திருக்கோலத்தைத் திருவீழிமிழலையில் தரிசித்தனர். இதனை, "மைம்மருபூங்குழல்" என்னும் தேவாரத்தாலும், "மைம்மருபூங்குழல்" (திருஞா. ௫௦௭) என்னும் பெரியபுராணத்திருவிருத்தத்தாலுமுணர்க.

௮௪. எய்யாமல் - இளைப்பின்றி.

௮௫. அடியைச் சிவப்பேற்றியது - பரவையாருடைய திருமனைக்குத் தூதுபோகும்படி செய்தது. பாவலன் - சுந்தரமூர்த்திநாயனார்.

௮௬. சம்பு - நரி. வாசி - குதிரை. மந்திரி - மாணிக்கவாசகர்.

௮௭. பார்த்திபன் - வரகுணபாண்டியர். குடிலம் - சடை. சிவலோகம் வருவித்ததை, திருவிளை. வரகுணனுக்குச் சிவலோகங்காட்டியபடலத்தாலுணர்க.

௮௮. தரிப்போன் - தண்டீசர்.

௯௦. நாற்பத்தெண்ணாயிரவர் - நாற்பத்தெண்ணாயிரமுனிவர்; "எண்ணுமொருநாற்பத் தெண்ணாயிரவரெனும், புண்ணிய வேடப் புனிதரும்" என்பது ஏகாம்பரநாதருலா.

௯௧. ஒன்பான் கூட்ட மாதவர் - தில்லைவாழந்தணர், பொய்யடிமையில்லாதபுலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பால் வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்பொழுதும் திருமேனி தீண்டுவார், முழுநீறுபூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார்.

௯௨. முன்னூல் (=முந்நூல்) - பழமை நூலாகிய வேதம், முப்புரியாகிய பூணூல். பாரகர் - கரைகண்டவர்.

௯௪. பண் அமர் பாட்டு - தேவாரம். ஓதும் பரிசனம் - ஓதுவார்கள்.

௯௫. தீர்க்கத்தபோதனரில், எதுகைபற்றி வல்லொற்று மிக்கது. பதினெண்மடத்தார் - சிவாகமபத்ததிகள் பதினெட்டும் இயற்றிய சிவாசாரியர்கள் பதினெண்மர்களுடைய பரம்பரையினர். அப்பதினெண்மர்களாவார்: துர்வாஸசிவர், பைங்களசிவர், உக்கிர ஜ்யோதி, ஸ்ரீகண்டர், விஷ்ணுகண்டர், ஸ்வபோதர், வித்தியாகண்டர், இராமகண்டர், ஞானசிவர், ஞானசங்கரர், ஸோமசம்பு, பிரஹ்மசம்பு, அகோரசிவர், வருணசிவர், திரிலோசனசிவர், பிரஸாதசிவர், இராமநாதசிவர், ஈசானசிவரென்பவர்கள்; "பதினெண் மடத்திற் பயிலு - மு

V. B. SUBB TAMIL PANDIT

தலிகளும்'' என்பது திருவானைக்கா வுலா. "வெண்ணீற்று, வண்டற் பதி னெண் மடத்தாரும்'' என்பது திருக் காளத்திநாதருலா, ௧௧௪.

௬௬. அழகிய நாயகர் - பொன்ன னையார் செம்பொன்னால் இயற்று வித்த மூர்த்தி.

௬௭. திருக்கண்ண ராசேந்திர உத் துங்கன் - திருக்கண்ணதேவர்; இவர் சிவகங்கை அரசர்களுடைய உறவி னர். இவருடைய பரம்பரையோர், இக்காலத்துத் திருப்பூவணத்தைச்சா ர்ந்த பிரமனூரிலிருக்கின்றனர். உத் துங்கன் - உயர்ந்தவன்.

௬௯ - ௧௦௦. தன் வரிசைப்பேர் - பூவணலிங்கமென்பது; 'தன்' என்ற து சிவபெருமானை.பூவணலிங்கமென் னுமுரிமைப்பேரான் - பூவணலிங்கம் பிள்ளையென்பவர். இவருடைய வழி த்தோன்றலாகிய மருதநாயகம் பிள் ளையென்பவர் இப்பொழுது மதுரை யிலிருக்கின்றனர்.

௧௦௧. ஆள்வாரி - ஆளோடி.

௧௦௨. நானம் - ஸ்நானம்.

௧௦௪. நதிமரபு - கங்காகுலம். ஈசு ரமூர்த்தி - ஈசுவரமூர்த்தியா பிள்ளை யென்பவர்; திருப்பூவணத்திற்கு மேற் கேஒன்றரை நாழிகைவழித்தூரத்திற் சாலையில் ஈசுவரமூர்த்தியா பிள்ளை மடமென்று ஒரு பழைய கட்டிடமிரு ந்து சில வருடங்களுக்குமுன்பு இடி ந்துபோயிற்றென்பர். இவருடைய ப ரம்பரையோர் திருப்பூவணத்திலே இருக்கின்றனர்.

௧௦௬. வயனம் = வசனம் - சொல்; "நால், வயனத்தவ'' என்பர். (திரு விளை. மாறியா. செய், ௨௭.)

௧௦௮. பானுகம்பன் - சிவகணத் த லைவர்களிலொருவன். வாணன் - வா ணாசுரன். ஆனயர் - ஆனயநாயனார்.

௧௧௦. திருநீலகண்ட யாழ்ப்பாணர்.

௧௧௨. மணிகுண்ட நெடுந்தீர்த்தம்- மணிகர்ணிகாதீர்த்தம். 'செய்யநெடு ந்தீரச்சிவன்' என்றும் பாடம்.

௧௧௩. நவக்கிரகங்களும் நக்ஷத்திர ங்களும் இத்தலத்தை வலஞ்செய்தல், "எண்ணி லங்குறை சராசர மிலிங்க மென் றெண்ணி, விண்ணி னுள்களுங் கோள்களும் விலங்குவது'' திருவிளை. இரதவா. செய். ௩. என்பதனாலும் விளங்குகின்றது.

௧௧௫. போது அஞ்சு எய்யும் போ ர் - ஐந்து மலர்ப்பாணங்களை எய்யும் சண்டையை.

௧௧௬. பெண் - திருமகள். தாலி யைவைத்த.

௧௧௭. தொழும்பு ஆவணம் - அடி மைஓலை.

௧௧௮. தம்மை அடைவாருடைய எல்லாப் பாவங்களையும் தீர்த்தருளுத லின், திருப்பூவணேசருக்கு அடைவா ர்வினை தீர்ப்பவரென்பது திருநாம மாதலால்,இங்கே 'பழவினைவேரறுப் பான்' என்றார். ௧௦௪: 'அடைவார்வி னைதீர்த்த,பேணைப் புதுக்கீர் பிரான்'' ௩௬௭: "அடைவார் வினைதீர்க்கு மம் மான்'' என இந்நூலுட் பின்னர் வந் திருத்தல்காண்க. சுந்தர. தே. ௧: "அ டைவார் வினைதீர்க்கும், புரிவுடை யாருறை பூவண மீதோ'', ௨: "அண் ணலெ னுநினை வார்வினை தீர்ப்பார்'' என்னும் திருவாக்கையும் உணர்க.

௧௨௦. கதிர் - சூரியன்.

௧௨௩. காரைக்காலம்மையார்.

௧௨௪. ஆடி-கண்ணாடி. செம்மல்- சுந்தரமூர்த்திநாயனார். பேரிசை ஞா னிப்பிராட்டியர் - இசைஞானியார்.

௧௨௪-௧௨௫. தென்சையம்-பொதி யின்மலை. பாண்டிமாதேவியர் - மங் கையர்க்கரசியார்.

௧௨௬. உற்பவித்தமங்கையர் - பர வையார், சங்கிலியார்.

௧௨௯-௧௩௦. தண்பவனம்-தண்ணிய காற்றையுடைய; தடபத்தையுடை யவனருமாம். மின்னாள் - அழகியமி ன்னம்மை. திருமழுவார் - அழகிய நாயகர். இவ்விருவரும் எழுந்தருளிய புட்பவனமென்க.

௧௩௯. மயிலுக்கு நீலகண்டமென் று ஒரு பெயருண்டு; காரணப்பெய ர்; "கலவ மாமயி லெருத்திற் கடிமல ரவிழ்ந்தனகாயா'' (சிந்தா. கனக.

செய். உ) என்பதனுலுமுணர்க.

கரு௨-கருரு. பல மானைவிடின், வசஞ்செய்யாரென்றெண்ணினூர்.

கரு௪. குயிலை-இந்திரனுகியகுயிலை. மகம் - தக்கன்யாகம்.

க௪௨. சின்ன - சிறிய. மெல்லியலாள் - பொன்னனையாள். நகச்சின்னம் - நகத்தழும்பு. பகைச்சு-பகைத்து.

க௪ரு. வாகு - அழகு. பசலையின் - பசலையை உடைமையால். வன்சிலை-மேருமலை. ஏகாசம் - உத்தரீயம்.

க௪௬. நாவாய் - கப்பல், நாவையுடைய வாய்.

க௪௭. திருமேனிப்பாதி-அம்பிகையின்பாகம்.

க௪௮. மன்மதபாணம் மொட்டருமலராதலின், 'விரியாது தம்மேற் சொரிபூமழை' என்றூர்; மணி. க௮-ம் கா. க௰ரு: "சுருப்புநாண் கருப்புவிலருப்புக் கணைதூவ", ௨௦-ம் கா. கூ௨: - "கருப்பு வில்லியை யருப்புக்கணை மைந்தனை", ௨ரு-ம் கா. கூ௦: "கருப்பு வில்லி யருப்புக்கணை தூவ" என்று வருதல்காண்க. "கரும்புஞ் சுரும்பு மரும்பும் பொரும்படைக் காமர் வில்வேள்"என்பர்;(சிதம்பரச்செய்.)

கரு௦. மாலாகிய வலையை.

சரு௨. பண்ணையுடைய பவளவாயர். நீர் போந்து புட்பவனத்தைத் தாருவனமாக்கினீர்.

கருரு. பாணி கை மழு ஏந்தும் நீர் - கையின்கண் சிறிய மழுப்படையை ஏந்துகின்ற நீர்.

கரு௬. அவ்விரதவாதம்-அந்த ரஸவாதவீலை. இ இரதவாதம்-இந்தத்தேரின்வாதம். கவ்வை - துன்பம்.

கரு௭. இடைதல் - பின்னிடுதல்.

கரு௮-கருகூ. மூர்த்தம்-உருவம். நனையும் பொதியும் மலரும் கொட்டையும் மதுவும் மணமுமாகிய ஆறும்; பெதும்பைப்பருவமுதலிய ஆறையும் குறிப்பித்தபடி.

கருகூ. சீறும்-மன்மதனைச் சீறிய.

க௬௦. விழி - நெற்றிவிழியை.

க௬௨. போகம் - சிலேடை. கூழ்-பயிர்.

க௬ரு. தோகையை விரித்தறியாத.

க௬௫. நேசன் - சிவபெருமான். 'வாள்' என்றது கண்ணை.

க௬௭. கேட்டு - செப்புவேண்டுமென்றுகேட்டு.

க௬கூ. பூசை-பூனை. ஓவியப்புறவு-சித்திரத்திலெழுதியபுறு.

க௭௧. இறால் - தேன்கூடு. வடியாததேன்போலும் மழலைச்சொல்.

க௭௨-க௭ரு. அபரபக்கம் - பின்பக்கம். பயப்பய=பையப்பைய-மெல்லமெல்ல.

க௭௪. சுந்தரமூர்த்திநாயனருடையமணம் முன்கூட்டமுயன்றும் பின்கூட்டப்படாமற்போனமை ஈண்டு உவமம். வீட்டில் - பிரளயகாலத்தில்

க௭௫. மதுவும் கைடவனும்.

க௭௬. குத்திரம் - வஞ்சனை.

க௮௨. "ஆவண வீதிப் பூவணங் கோயில்கொண் டாயே" என்பது, கருவூர்த்தேவர் திருவிசைப்பா; க-ஏகா அணவும் - காத்தல்பொருந்திய, சோலையையொத்த.

க௮௭. திருநெல்வேலி.

க௮௮. திருவானைக்கா.

க௮கூ. திருக்காஞ்சி.

ககூ௦. மதுரை.

ககூக. திருப்பூவணம்.

ககூ௨. பவனிவரலை.

ககூ௭. மறையாகிய ஈ.

ககூகூ. மலையிற்பசுந்தேன்-உமாதேவியார்.

௨௦௨. இரதம் - தேர், ரஸம். கருணைப்பழம் - சிவபெருமான்.

௨௦ரு. அகம் - மனம், வீடு. இந்தக்கன்னியை.

௨௦௪. சிறியார்க்கு என்றும் இனியதுகாட்டார்.

௨௦௭. கிடவாதகிள்ளை. கிளி மன்மதனுக்குக்குதிரையாகக் கூறப்படும்.

௨க௦. பூவில் - பூவாகியவில்; "பூவிற், கையதே மலர்வாளிக் காளை" என்பர்; (திருவிளை. விருத்த. ௨ரு.)

௨கக. உமாதேவியார், முருகக்கடவுளுடைய ஆறு திருவுருவத்தையும்

ஒன்றாகக்கூட்டினமை ஈண்டுவமம்.

௨௧௩. தெட்டும் - வஞ்சிக்கும்.

௨௧௮. பதம் - காலம்.

௨௧௯. முல்லையாகிய அன்னது.

௨௧௯-௨௨௨. "அல்லியங் கோதை மாத ரன்போடு வளர்த்த முல்லை, மெல்லரும் பீன்ற தென்னு விழாவயர் முழவு" என்பது, நைடதம், நாட்டுப்படலம், ௨௦.

௨௨௪. மூவர்.

௨௨௫. மாணிக்கவாசகர்.

௨௨௬. அந்தாதி - அற்புதத் திருவந்தாதி. அம்மை - காரைக்காலம்மையார்.

௨௨௭. அன்பன் - சேரமான்பெருமாள்நாயனர்.

௨௨௮. வேந்தன் - ஐயடிகள் காடவர்கோனயனர்; இவரருளிச்செய்த வெண்பா - க்ஷேத்திரத்திருவெண்பா.

௨௩௦. மும்மணிக்கோவை-திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. மூர்த்தி - பட்டினத்துப்பிள்ளையார்.

௨௩௬. கபோலம் - கதுப்பு.

௨௩௮. பெண்ணமுது - பொன்னனையாள்.

௨௪௪. நாண் - நாணம், நாணி.

௨௪௫. தளம் - சேனை.

௨௪௭. "இருநோக் கிவளுண்கணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (௧௦௯௧) என்னும் திருக்குறளை இங்கே அறிக.

௨௪௮. "பாலொடு தேன்கலந் தற்றே" என்பது திருக்குறள், ௧௧௨௧.

௨௫௦. பூரித்தல் - நிறைத்தல்.

௨௫௧. மாலானர் - திருமால், மயக்கமுடையவர்.

௨௫௩. கிஞ்சுகம்-முண்முருங்கை. நிறமாகிய சண்பகம்.

௨௫௪. நாசியாகிய குமிழம்பூவும்.

௨௫௫. பல்லவம் - தளிர்.

௨௫௨ - ௨௫௬. இவற்றில் மங்கையைப் புட்பவனமாக உருவகஞ்செய்திருத்தல் வியக்கற்பாலது.

௨௫௭. சாயல்-மென்மை. இயல் - நடை.

௨௫௯. தோழியனையும் உளப்படுத்தி, 'தம்ம' என்றார்.

௨௬௫. அந்த மானை ஏந்திய கரத்தையுடைய அம்மான் - சிவபெருமான்.

௨௬௫-௨௬௬. காராழி சூழ் தேர் - கரிய கடல்சூழ்ந்த பூமியாகிய தேர்.

௨௬௭. கூவிரம் - தேரின் மேன்மொட்டு. 'கூவிரிபோய்' என்றும் பாடம்; "கூவிரியால் விண்விரியக் கூரா ழிகள்பதிந்து, பாவிரிசேடன் படம்விரிய" என்பது, தேவையுலா.

௨௭௪. சண்ணித்த - பூசிய.

௨௭௭. விது - பிறைமதி.

௨௮௦. கொடியார்-கொடுமையையுடையார்; காக்கை; காக்கைதடுத் தாற் செல்லலாகாதென்பது விதி; "வடித்தெடுத்த வேற்கண் மணியிரண்டு கொண்ட, கொடித்தடுத்தா லாரே ருவார்" (தமிழ்நா.) என்பதிலும் இச்சிலேடைப் பொருளமைந்திருத்தல்காண்க.

௨௮௨. அயிர்க்க-சந்தேகிக்க.

௨௮௫. ஆவி-புகை, உயிர்.

௨௮௮. சோபம்-இரத்தத்தைக் குறைக்கும் ஒருவகைநோய்; "கோபமத னலே முறையுயிருங் கொள்ளைகொள்ளுஞ், சாபமத னலே தயங்கினேன் - சோபமனத்து" (வருணகுலா. ௪௪௪.) என்பதனுலுணர்க.

௨௮௯ - ௨௯௦. தேர் மலயக்கால் - மன்மதன்தேராகிய தென்றல்.

௨௯௧. அள்ளூறு-மிக்கூறுகின்ற.

௨௯௮-௩௧௧. இக்கண்ணிகளிற் பாண்டிநாட்டுச் சிவஸ்தலங்கள் ௧௪-ம் கூறப்படுகின்றன.

௨௯௯. பிறிக்கும் - பிரிக்கும்.

௩௦௦. திருக்குற்றாலத்தில் அகத்தியமுனிவரால் திருமால் சிவபெருமான்வடிவம்பெற்றனர். இதனை, "முறுகுவலம் புரிக்கரத்து மான்குறுகப் பெரியதுழாய் முடியின் மீதே, சிறியமதிக் கலைகுறுகத் திலகநுதல் விழி குறுகச் செழும்பூண் மார்பி, னிறையரவப் பணிகுறுக நிகிலவுல கமுநிறைந்து நீண்ட மேனி, குறுகுகுறு கெனப்பரவித் திருவடிக்கீழ்க் குறு

முனிவன் குறுகுங் காலை", "தவம் பெருக வறம்பெருகப் பொருள்பெரு கத் தெருள்பெருகச் சைவ மோங் கிச், சுவம்பெருக மனுநீதித் துறைபெ ருக நிறைபெருகச் சுருதி வாய்மை, நவம்பெருகச் சரியாதி சதுட்டயங்க ணனிபெருக ஞால மெல்லாஞ், சிவ ம்பெருகக் குறுகியருள் பெருகினன் குற்றாலத் தேவ தேவன்" (திருக் கூ. திருமால்சிவ. ௧௪௨, ௧௪௩.) என்னும் அருமைச் செய்யுட்களா லுணர்க. இக்கதை, கந்தபுராணம், திருக்குற்றாலப் படலத்துமுள்ளது.

௩௦௫. கொம்பர் அன்னாள்தான் - உமாதேவியார். ஐ ஒருகூறு - அழகிய ஒருபாகத்தில்.

௩௦௭. விடைக் குஞ்சரம் - இடபமாகிய யானையை.

௩௦௯. திருக்கானப்பேர் - காளையார்கோயில்.

௩௧௦. தன் இக்கொடும் குன்ற - தன்னுடைய கரும்புவில்லோடும் குறைய. கொடுங்குன்றம் - பிரான்மலை.

௩௧௧. பாவண்ணம் - பாக்களின்வண்ணம். நா அணங்கு - ஸரஸ்வதீ தேவி.

௨௯௮-௩௧௧. இக்கண்ணிகளிற் பாண்டிநாட்டிலுள்ள பதினன்குதலங்களும் திருப்பதிக்கோவையிலுள்ள முறைப்படியன்றி, "கூடல் புனவாயில் குற்றால மாப்பனூ, ரேடகநெல் வேலி யிராமேச - மாடானை, தென்பரங் குன் றஞ்சுழிய றென்றிருப்புத் தூர் கானை, வன்கொடுங்குன் றம்பூ வணம்" என்னும் பழைய வெண்பாவிலுள்ள முறைப்படியே அமைந்துள்ளன.

௩௧௪. தருநாடு - தேவருலகம்.

௩௧௫. திருமுதலிமூவர் = மூவர்முதலிகள் - திருஞானசம்பந்தர்முதலிய மூவர்.

௩௧௯. அரக்கன் - இராவணன்.

௩௨௦. நீராள் - கங்கை. குன்றாள் - உமாதேவியார்.

௩௨௧. இன்னிறத்த - இனிய நிறத்தையுடைய. பொன்னிறம் - பசலைநிறம். ஒருத்தன் - மன்மதன்.

௩௨௩. பகைகொண்டு - வாயுதேவனிடம் விரோதங்கொண்டு.

௩௩௦. பெண் - திலோத்தமை.

௩௨௮-௩௩௩. குடியேற்றி விட்டனைய காட்சியாள்.

௩௩௬. "கற்பூர தாம்பூலங் கைக் கொடுத்தேன்" என்பது, அருணைத லாதீத்தன்மடல், ௪௧௨.

௩௪௧. தீர்த்தன் - தேவன்.

௩௪௪. கால் - தென்றற்காற்று.

௩௪௫. புலியை வாலுருவிவிடலென்பது ஒருபழமொழி; "வயப்புலியை வாலுருவி விடுகின்றீரே" என்பது, பாரதம், சூது போர்ச்சருக்கம், ௨௯௫.

௩௪௬ "அலைவாய் விடத்தினுடன்றோன்றி யாவி கவரும் வெண்ணெருப்பே" (நைட. சந்திரோ. ௩௭.) என்று பிறரும் கூறுவர்.

௩௪௯. இதழி - கொன்றை.

௩௫௫. வலக்கண்ணாம் காலைக்கதிர் - சிவபெருமானுடைய வலக்கண்ணாகிய சூரியனை. ஆலித்து - முழங்கி.

௩௫௬. திருவாபரணம் - பாம்பு. பாம்பு காற்றை உண்ணுமென்றல் ஈண்டு அறியற்பாலது.

௩௫௭. தக்கன்யாகத்திற் சந்திரனைச் சிவபெருமான் திருவடியால் தேய்த்தது இங்கே உணரத்தக்கது.

௩௫௮ தக்கன்யாகத்தில் இந்திரன்கொண்ட குயில்வடிவின் இறகைச் சிவபெருமான் திருக்கரம் வெட்டினமையின், குயிலாலுண்டாகும் வருத்தத்தைப் போக்கிக்கொள்ளுதற்கு இவள் அதனைத் தரிசித்தாள்.

௩௫௯. மன்மதனை எரித்ததுபற்றி நெற்றிக்கண்ணை வாழ்த்தினாள்; ௪௫௮: 'காமப் பகையையடர் கண்ணாளா' என்பர் பின்னும்.

௩௬௭. கழங்கு - கழற்சிக்காய். சிரித்து - சிறப்புற்று.

௩௬௮. இழை - நூலிழை.

௩௭௦. பரல் - பருக்கைக்கல். சேக்கும் - சிவக்கும்.

௩௭௧. பூவை - திருப்பூவணம்; இத் தலத்தில் திசை மயக்கமுண்டென்ப

து பிரத்தியக்ஷம்.

௩௭௩. "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந்நோய்," என்பது திருக்குறள், ௧௨௨௭.

௩௭௪. ஓவநூல் - சித்திரநூல்.

௩௭௫. ஓவியம் - சித்திரம்.

௩௭௭. போதரசு - பிரமதேவர்.

௩௭௭ - ௩௯௯. இக்கண்ணிகளிற் பொன்னனையாளுடைய நித்தநியம முதலியவற்றை முறையே கூறியிருக்குமருமை மிகவும் பாராட்டற்பாலது.

௩௭௮. புலரி - விடியற்காலம்.

௩௮௩. திருந்து அம் சில் ஓதி - திருத்திய அழகிய சிலவான கூந்தலையுடையாள். திரு - சந்நிதி.

௩௮௬. நாயன்-தலைவர்.

௩௮௮. சுந்தரப்பேரண்ணல் - சோமசுந்தரக்கடவுள்.

௩௯௧. நெய்யகுழல் - நெய்ப்புற்ற கூந்தலையுடையாய்; அரி - திருமால்.

௩௯௩. கரும்பொன் - இரும்பு.

௩௯௬. விம்பம் - கொவ்வைக்கனி.

௩௯௭. வள்ளி - வள்ளிநாயகியார். மக - முருகக்கடவுள்.

௪௦௦. பொரிய - கரிய.

௪௦௨. தரு - பாரிசாத விருக்ஷம்.

௪௦௩. இறந்த தன்னுடையபிதாவின்என்புகளைக் கங்காநதியிலிடுவதற்கு அவற்றை ஒருகுடத்திலடைத்து வைத்துக்கொண்டு செல்லும் தருமஞ்ஞனென்னும் அந்தணனொருவன் இத்தலம் வந்து மணிகர்ணிகையின் கரையிலிருக்கையில், அவ்வென்புகள்தாமரைமலரும் நீலோற்பலமலருமாயினவென்பர்; இதனை, இத்தலபுராணத்தில், தருமஞ்ஞன்முத்திபெற்றசருக்கத்தாலறிந்துகொள்க. அத்திமலரவென்பதற்குப் பூவாத அத்திமரம் மலரவென்பது மற்றொருபொருள்.

௪௦௪. தேவிபுரமென்பதுஇத்தலத்திற்கு உரிய ஒரு திருநாமம்.

௪௦௫. நளச்சக்கரவர்த்திக்குக் கலியின்துன்பம் இத்தலத்தில்நீங்கியது. இளனென்னுமரசன், தன்பால்வந்த ஆடவர்களை மகளிர்களாகச்செய்யும் இயல்பையுடைய வனமொன்றிற்புகுந்து பெண்வடிவமுற்றுப் பின் சில முனிவர்களுடைய கட்டளைப்படி அசுவமேதத்தாற் சிவபெருமானை உபாஸித்து அவ்வடிவம் நீங்கப்பெற்றமையின், 'இளச்சக்கர வர்த்திபணியெம்மான்' என்றார்; இதனை, இராமாயணம், உத்தரகாண்டத்தாலுணர்க.

௪௦௬. நீளத்தான் - திருமால்.

௪௦௭. ஏவண்ணக்கண் - அம்பின் இயல்பையுடையகண்.

௪௦௮. உய்வித்த-தேவர்களைப் பிழைப்பித்த.

௪௧௨-௪௧௩. மூலைத்தழும்பும் வளைத்தழும்பும் காஞ்சிபுரத்தில் அம்பிகைபூசித்தபொழுது உண்டானவைகள். வம்பு-கச்சு. மொய்ம்பு-தோள்.

௪௧௫. வேளூர் - வைத்தீசுவரன் கோயில். வைத்தியர் - வைத்தியநாதர்.

௪௧௬. விற்குந்தொழில் - வளையல் விற்குந்தொழில்.

௪௧௭. ஆரூரில்மொழியும்பெயர்-தியாகராசரென்னும் திருநாமம்.

௪௧௭ - ௪௧௮. பழியஞ்சும் ஆடல்-பழியஞ்சின திருவிளையாடல்.

௪௧௯. வையையாற்றைமறித்தது-பிட்டுக்கு மண்சுமந்தது.

௪௨௧. பைந்தாரான் - மன்மதன்.

௪௨௪. கொலைப்பாணமாதலின், நீலமலராகிய அம்பு விலக்கப்பட்டது.

௪௨௭. வார் என்-கச்சுஎன்கின்ற.

௪௨௯. துணைச்சக்கரவாளம் - இரண்டு சக்கரவாளப்பறவைகள்.

௪௩௦. சிவநேசம்பூண்ட தாடகையென்னுமங்கையொருத்தி திருப்பனந்தாளிற் சிவலிங்கப்பெருமானை நாள்தோறும் பூசித்துக்கொண்டுவருகையில், ஒருதினம் சாத்துதற்காகப் பூமாலையை இரண்டுகையாலுமெடுத்தபொழுது, கட்டுக்குலைந்து அவளாடை நழுவத்தொடங்கியது; முழங்கையால் அவ்வாடையை இடுக்கிக்கொண்டு மாலைசாத்துதற்கு முடியாமல் அவள் மிக வருத்தமுற்றனள், அப்பொழுது அவ்வருத்தம்பொறு

ழல் அவளன்புக்கிரங்கிச் சிவபெருமான் தமது திருமுடியைவளைத்து அம்மாலையை ஏற்றுக்கொண்டருளினரென்பது அத்தலபுராணகதை ல யாற் சிறப்பெய்தியதுபற்றி, க சி யென்பது மேற்கூறியதாடகைக்குப் பெயராயிற்றென்பர்; கு மதனெரிய விழிதிறந்த திருப்பனந்தாட் சிவனே மாய, வலைச்சிக்கு விடலினையே னும்மையுநான் வயப்படுத்தமாட்டே னந்தோ, குலைச்சிக்கோ ரன்னமின்னுங் காணாத சடை மௌலி குலைந்து போன, கலைச்சிக்கு வளைந்ததுவுங் கலையனுக்கு நிமிர்ந்ததுவுங் கண்டீர் தானே" என்னும் பழையபாட்டில் இவ்வரலாறு அமைந்திருக்கும் அழகைப்பார்க்க.

௪௩௧. அதி - அந்தஇடையை.

௪௩௩. அலுத்து-சலித்து

௪௩௪. மால் - கண்ணன்; மணிவரை - கோவர்த்தனகிரி.

௪௩௫. மட்டு-எல்லை, நறுமணம் வம்பு-வீண்செயல், கச்சு.

௪௩௬. உரோமாவலியாகிய மணிக்கயிறு.

௪௩௮. ஆவம்-அம்பறாத்தூணி. விசிகம் - அம்பு.

௪௩௯. திருமால் - கண்ணபிரான். படம் - காளிங்கனென்னும் பாம்பின் படம்.

௪௪0 - ௪௪௧. நான்மாடச் செய்ய நகர் - மதுரை. வேந்து - உக்கிரபாண்டியன். சையம் - மலை.

௪௪௨. கைதை - தாழம்பூ.

௪௪௩. பூமாலையை மருவாமை கூந்தலுடைய தொழில். அமைக்கு - மூங்கிலுக்கு.

௪௪௪. அகம் - உள்ளிடம்.

௪௪௭. மோகநூல் - காமநூல்; ௪௪௯: 'மன்மதனூல்' என்பர்பின்.

௪௪௯. கைவந்தோர் - தேர்ச்சியுற்றோர். தறுவாய் - சமயம்.

௪௫௧. மணாளன் - தலைவன். 'தோன்றி மரிக்குந்தெய் வங்கண்மணாளன்' என்பது, "செத்துப்பிறக்கின்ற தெய்வங்கண்மணவாள" (முத்துக். செங்கீ. க-௫) என்பதைத்தழுவியது.

௪௫௨. முளரி நயனன் - திருமால்.

௪௫௪. ஆர்ப்பு அவனி எங்கும் அதிர - முழக்கமானது அவனியெங்கும் அதிர.

௪௫௫. மன்ற - தெளிவாக.

௪௫௭. வீடாத - அழியாத.

௪௫௮. நாமம் - மிக்கபுகழ். காமப்பகையை - காமனுக்கியபகையை. வாமம் - இடப்பக்கம்.

௪௫௯. பவனகவனம் - காற்றைப் போன்றவேகம்.

௪௬0. பிச்சேற்ற - பித்தேற்ற; 'பேராளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி" என்பது திருவாசகம், திருவம்மானை, உ.

௪௬௧. பா அணங்கு-கலைமகள்.

௪௬௨ - ௪௬௪. சிலேடை: தேங்கினேன் - நிறைந்தேன். வண்டு - வண்டுகள், வளையல்கள். கண்ணீர் - கள்ளாகியநீர், விழிநீர். பொன்பூத்தல் - பொன்னிறமாகப்பூத்தல், பசலைநிறமடைதல். அலர் - மலர், பலரறிந்து கூறும் மொழி. வரும் மார்பம், வரும் ஆர்வம்; மார்பமென்பது மார்வமென்றும் வழங்குவதுண்டு.

௪௬௫. சம்பரனைவென்றானை-சம்பராசுரனைச் சயித்த மன்மதனை.

---

### அழகியநாயகர்துதி.

தன் அன்னை யார். வயின்-இடம், வயிறு. கரு-திருவுருவம்வார்த்தற்குக் கட்டிய கரு, கருப்பம்.

### சிறப்புப்பாயிரம்.

'பொன்னனையாள் பெற்றெடுத்த புத்திரனோர் கந்தசாமி' என்றது இந்நூலாசிரியர் ஓர் உருத்திரகணிகையின்புதல்வரென்பதைக் குறிப்பிக்கின்றது.

V.B, SUBRAHMANYASARMA
TAMIL